CHRI 2011

OPEN SESAME

# ප්‍රජාතන්ත්‍රවාදය, සංවර්ධනය හා තොරතුරු දැනගැනීමේ අයිතිය




Commonwealth Human Rights Initiative

working for the practical realisation of human rights in the countries of the Commonwealth

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

building a nation of integrity

වෙළුම 01

## பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம்

பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம் சுதந்திரமான, பக்கச்சார்பற்ற மற்றும் அரச சாரா நிறுவனமாகும். பொதுநலவாய நாடுகளில் மனிதஉரிமை அரசியல் உணர்நிலையை உறுதிப்படுத்தும் உரிமைக் கட்டளையைக் கொண்டிருக்கின்றது. 1987ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த பல நிபுணர்கள் ஒன்றிணைந்து பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தை தாபித்தனர் (CHRI). பொதுநலவாயம் அங்கத்துவ நாடுகளுக்கு பகிரப்பட்ட விழுமியங்களையும் சட்டத்தின் அடிப்படைகளையும் வழங்கிக்கொண்டிருக்கும் அதேவேளை, அதனுள் ஒரு பொதுமன்றமொன்றை உருவாக்கி அதிலிருந்து மனிதஉரிமைகளை ஊக்குவிக்கலாம் என்று நம்பப்பட்டது. அதேநேரம், பொதுநலவாயத்தினுள் மனித உரிமைகள் தொடர்பான அவதானம் அப்போது இல்லாதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாயத்தின் ஹராரே அடிப்படைகள், உலக மனிதஉரிமைகள் பிரகடனம், ஏனைய சர்வதேச மனித உரிமை கருவிகளுடன் பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் உள்ள மனித உரிமைகளுக்கு உதவி வழங்கும் ஏற்பாடுகள் என்பனவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பன பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தின் நோக்கங்களாகும். இவ்வமைப்பானது தனது அவ்வப்போதைய விசாரணைகள் மற்றும் அறிக்கைகள் என்பனவற்றை வெளியிட்டு வந்தபோதிலும், பொதுநலவாய நாடுகளில் மனித உரிமைகள் பற்றிய விடையங்களின்பால் ஈர்த்து, முன்னேற்றத்திலும் தடைகளின் காரணிகளிலும் தொடர்ச்சியான அவதானத்தை செலுத்தி வருகின்றது. மனிதஉரிமை துஷ்பிரயோகங்களை அல்லது மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அணுகுமுறைகளையும் ஏற்பாடுகளையும் பயிற்றுவித்து, பொதுநலவாய நாடுகளின் செயலகம், அங்கத்துவ நாடுகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் என்பனவற்றுக்கு ஆலோசனைகளை வழங்கிவருகிறது. இதன் பொதுக் கல்வியூட்டல் நிகழ்ச்சித்திட்டம், கொள்கை உரையாடல்கள், ஒப்பீட்டாய்வுகள், எடுத்துக்கூறல் மற்றும் வலைப்பின்னலாக்கல் செயற்பாடுகள் என்பனவற்றின் வாயிலாக, அதன் முதன்மைப் பிரச்சினைகள் மீது ஒரு அறிவியல் நெறியாளியாக இவ்வமைப்புச் செயற்பட்டு வருகின்றது.

இதன் அனுசரைணை நிறுவனங்கள் தேசியமட்ட தோற்றத்திற்கும் சர்வதேச வலைப்பின்னலுக்குமான அனுமதியை வழங்கியுள்ளன. இவற்றின் நிபுணர்கள் தமது வேலைகளுக்கான, மனித உரிமைகளின் விழுமியங்களை மையமாகக் கொண்ட பொதுக் கொள்கைகளை உருவாக்கி, மனித உரிமைகள் பற்றிய தகவல்கள், தரநிர்ணயங்கள் மற்றும் பயிற்சிகள் என்பனவற்றை பரிமாறுவதற்கான ஒரு ஊடகமாகச் செயற்படும். இக்குழு உள்ளூர் அறிவினை ஒன்று திரட்டி, கொள்கை வகுப்பாளர்களை அணுகி, பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, மனிதஉரிமைகளை ஊக்குவிக்க ஒத்துழைப்பு வழங்குபவராகவும் திகழ்கிறது.

பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கமானது டில்லியில் தாபிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து தலைநகர் லண்டனிலும் மற்றும் கானா நாட்டு தலைநகர் அக்ராவிலும் அலுவலகங்களைக் கொண்டிருக்கின்றது.

**சர்வதேச ஆலோசனை ஆணைக்குழு:** பிரதானியாக, சேம் ஒகுட்சேட்டோ என்பவரையும் அங்கத்தவர்களாக, யுனிஸ் புருக்மன் - அமிஸ்ஸா, முரே பேர்ட், யாஷ் காய், எலிஸன் டக்ஸ்பரி, நெவில் லின்டன், பீ.ஜீ வெர்கசி, ஸொஹ்ரா யூசுப் மற்றும் மஜா தருவாலா ஆகியோரைக் கொண்டிருக்கின்றது.

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் (இந்தியா) :** பிரதானியாக பீ.ஜீ வெர்கசியும், அங்கத்தவர்களாக அனு அகா, பீ. கே சந்திரசேகர், பக்வான்தாஸ், நிட்டின் தேசாய், கே.எஸ் திலன், ஹரிவான்ஸ், சன்ஜோய் ஹஸரிக்கா, பூணம் முட்ரேஜா, ரூமா பால், ஆர். வீ. பிள்ளை, கமல்குமார் ஆகியோரும் பணிப்பாளராக மாஜா தருவாலா கடமையாற்றுகின்றனர்.

**நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் (கானா):** பிரதானியாக சாம் ஒகுட்சேடோவும் அங்கத்தவர்களாக அனா பொஸ்மன், நெவில் லின்டன், எமிலி சோட், வேர்கசி ஆகியோரும் பணிப்பாளராக மாஜா தருவாலாவும் கடமையாற்றுகின்றனர்.

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் (இங்கிலாந்து):** பிரதானியாக நெவில் லின்டன், இணைப்பிரதானியாக லின்சே ரோஸ், அங்கத்தவர்களாக பிரான்ஸ் டி சூசா, ஒஸ்டின் டேவிஸ், மீனாக்சி தார், தெரக் இங்ரம், கிளயர் மாட்டின், செய்யித் ஷர்புத்தீன் மற்றும் எலிசபத் சுமித் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

பொதுநலவாய ஊடகவியலாளர்கள் அமைப்பு, பொதுநலவாய சட்டத்தரணிகள் அமைப்பு, பொதுநலவாய சட்டக் கல்வி அமைப்பு, பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு, பொதுநலவாய ஊடகச் சங்கம், பொதுநலவாய ஒலிபரப்பு அமைப்பு.

ISBN : 978 - 955 - 1281 - 43 - 4
பொதுநலவாய மனித உரிமைகள் புத்தாக்கம், 2011
இந்த அறிக்கையிலிருந்து பகுதிகள் உரியவருக்குத் தெரியப்படுத்திய பின்னர் பயன்படுத்தலாம்

பொ.ம. பு. தலைமையகம், புது டில்லி
பீ - 117, இரண்டாம் மாடி,
சர்வோதய என்கிளாவே,
புதுடில்லி – 110017
தொ - +91 – 11 – 43180200
தொ.ந +91 – 11 –2686 – 4688
மின்னஞ்சல்:
ingo@humanrightsinitiative.org

பொ.ம. பு. ஐக்கிய இராச்சியம், இங்கிலாந்து
பொதுநலவாய கற்கை நிறுவனம்
28, ரசள்ஸ் சதுக்கம்
இங்கிலாந்து WC1B5DS
ஐக்கிய இராச்சியம்
தொ -+44 – 020 – 7 862 - 8857
தொ.நூ44 – 020 – 7 862 – 8820
மின்னஞ்சல்: chri@sas.ac.uk

போ.ம. பு. அக்ரா
இல்ல இலக்கம் 09, சமோரா மசேல்
அஸ்யும் டவுன் வீதி
பேவளி ஹில் ஹோட்டலுக்கு எதிராக
ட்ரஸ்ட் டவருக்கு அருகில், அக்ரா, கானா
தொ -+233302971170
தொ.ந - +233302971170
மின்னஞ்சல்:
chriafr@africaonline.com.gh

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
06, 37 ஆவது ஒழுங்கை, குயின்ஸ் வீதி, கொழும்பு 3
தொலைபேசி 011 2506419
தொலைநகல் 011 2592287
மின்னஞ்சல்: tisl@tisrilanka.org
இணையத்தளம்: www.tisrilanka.org

# தகவல் அறிந்து கொள்ளும் மற்றும் பெற்றுக்கொள்ளும் உரிமை ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திக்கான உரைகல் ஆகும்......

Open sesame: **பொதுநலவாயத்தில் தகவலுக்கான உரிமையை நோக்கி, 2003 பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தின் சர்வதேச ஆலோசனை ஆணைக்குழு வழங்கிய அறிக்கை**

**ஆசிரியர் (மூலப் பதிப்பு)**
மஜா தருவாலா

**தழுவியெழுதியோர்:**
வெங்கடேஷ் நாயக்
சஞ்சிதா பாக்ஷி

**மொழிபெயர்ப்பு**
எம். சீ. ருஸ்மின்

**பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம்**
புது டில்லி

**ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் - இலங்கை**
கொழும்பு

**2011**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பொதுவளம் | 03 |
| அதிகாரம் வாய்ந்தவர்களால் மறைத்து வைக்கப்படல் | 04 |
| அடிப்படை மனித உரிமை | 06 |
| தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமை தொடர்பாக இலங்கையின் நிலை | 10 |
| பொதுநலவாய சபையின் செயற்பாடுகள் | 11 |
| மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் | 14 |
| ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திக்கான வழிகள் | 15 |
| ஆனால் இடையூறுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன | 36 |

# தகவல் அறிந்து கொள்ளும் மற்றும் பெற்றுக்கொள்ளும் உரிமை ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திக்கான உரைகல் ஆகும்......

தற்காலத்தில் நாம் நினைத்துக்கூடப் பார்க்க இயலாத அளவில் தகவல் அறிந்து கொள்ளும் மற்றும் பெற்றுக்கொள்ளும் ஜனநாயகமயமாக்கலின், அதிகாரத்தால் மாற்றங்கள் மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான சகல சந்தர்ப்பங்களை எமக்கு வழங்கியுள்ளது. இந்த வித்தியாசத்தை யாராயினும் தேவையானவர்களுக்காக யதார்தமாக்குவதே எமது நடவடிக்கையாய் இருக்க வேண்டும். தகவல் அறிவதை நம் பக்கம் வைத்துக்கொண்டு அறிவு பெறும் ஆற்றலை சகலரும் பெற்றுக் கொள்ள வழிவகுப்பதன் மூலம் வறுமையை நோக்கி செல்லும் வழியை மாற்றியமைக்க முடியும்.

**கொபி அனான் முன்னாள் செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகள் சபை**

அர்த்தமுள்ள ஜனநாயகத்துக்கும் மற்றும் சகல வகையிலும் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கும் ஒரே வழி அரச நிர்வாகத்திலுள்ள, வெளிப்படைத் தன்மையாகும். வெளிப்படை ஆட்சி முறையை விருத்தி செய்வதற்கு தகவல் உரித்துரிமைச் சட்டம் பிரதானதோர் இயந்திரமென 85 இற்கும் மேற்பட்ட நாடுகள் அங்கீகரித்துள்ளதோடு அவர்களது பிரஜைகளின் உரிமைக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் அரசமைப்பிலும் இடமளித்துள்ளன. 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தெற்காசியப் பிராந்தியத்தின் எந்தவொரு நாடும் தமது அரச நிறுவனங்கள் தமது அலுவலகங்களில் வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டும் எனக் கோரும் முக்கிய சட்டங்களை அலரசமைப்பில் கொண்டிருக்கவில்லை. ஒன்பது வருடங்களின் பின்பு பாகிஸ்தான் (2002), இந்தியா (2005), நேபாளம் (2007) மற்றும் பங்களாதேஸ்

(2009) ஆகிய நான்கு நாடுகளும் ஆட்சியின் தத்துவ ஞானம் மற்றும் திறமைகளை இரகசியத்திலிருந்து வெளிப்படைத் தன்மைக்கு மாற்றியமைக்கும் உத்தேசத்தில் சட்டங்களை இயற்றின. தமது அலுவல்கள் பற்றிய தகவல்களைப் பிரஜைகளிடமும் பகிர்ந்து கொள்ளுமாறு 2008 இல் மாலைதீவு அரச அதிகாரிகளுக்கு ஆட்சியாளர்களால் பணிப்புரை விடுகப்பட்டது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய நாடுகள் (சார்க்) அமைப்பின் உறுப்புரிமை நாடுகள் என்ற வகையில் தெற்காசிய நாடுகள் பொதுத் துறையில் திறந்த தன்மையைப் பேணுவதில் உள்ள தமது இணக்கப்பாட்டினைப் பிரகடனப்படுத்தியுள்ளன. சார்க் சமூக சாசனம், அரச மற்றும் தனியார், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தமது நிர்வாக நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையின் முக்கியத்துவத்தை 2004 ஆம் ஆண்டு ஏகமனதாக வலியுறுத்தி அறிக்கையிட்டது.

தகவல்களைப் பெறுவதற்கான தனது சொந்த அரசமைப்பை இயற்றுவதற்கு 2003 இல் இலங்கை உறுதியான நடவடிக்கைகளை எடுத்தது. சட்டமா அதிபரால் சம்பந்தப்பட்ட சட்ட மூலம் அரசமைப்புக்குட்பட்டதா என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அமைச்சரவையால் தகவல்களை பெற்றுக்கொள்ளும் சட்ட மூலம் அங்கீகரிக்கப்பட்டது3 எதிர்பாராத விதமாக அரசாங்கம் அந்த வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறியது. அதன் பின்பு விரைவிலேயே அரசாங்கம் பதவி விலகியது. பின்பு வந்த காலங்களில் வடக்குக் கிழக்கில், யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசாங்கம் இச் சட்ட மூலத்தை கிடப்பில் போட்டது. சுனாமி அனர்த்தத்தின் பின்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவென நிதி மற்றும் பொருட்கள் பகிர்தளித்தல் சம்பந்தமாக சிவில் சமூகமும் மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனங்களும் வெளிப்படைத் தன்மையைக் கோருகின்றன. பொருளாதாரம் மற்றும் மனிதவள அபிவிருத்தியில் பிராந்தியத்தின் அதன் முன்பிருந்த அந்தஸ்தை இலங்கை மீண்டும் பெற வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சிக்கு அமைவான ஜனநாயக ஆட்சிமுறை இருப்பது இன்றியமையாததாகும். தகவல் அறியும் உரிமை இல்லாதவிடத்து இலங்கை உயிரோட்டமுள்ள ஜனநாயகம் மற்றும் பாகுபாடற்ற அபிவிருத்தியை அடைவதற்காக தொடர்ந்தும் போராட வேண்டிய நிலை ஏற்படும்.

## பொதுவளம்

இது தகவல் செல்வாக்குச் செலுத்தும் யுகம் ஆகும். முன்னெப்போதுமில்லாதவாறு தகவல்களை ஒன்று திரட்டும் தொழிநுட்பம் அதை மிக எளிதாகவும் மற்றும் அதை வியப்பான வகையில் பரிமாறிக் கொள்ளல் அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக தகவல்களை மாற்றியுள்ளது.

சகலருக்கும் மட்டுப்படுத்தப்படாத வகையில் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான உலகளாவிய வளமே தகவல் ஆகும். அரசாங்கம் இந்த வளத்தின் பாரிய வதிவிடமாகும். அரசாங்கம் தன்னகத்தே வைத்துள்ள தகவல்கள் தேசத்தின் ஞாபகசக்தி மாத்திரமல்லாது அது, அரசாங்கத்தின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய பூரண சித்திரத்தை வழங்குகின்றது. அரசாங்கத் தகவல்கள் சர்வதேச உடன்படிக்கைகள், பேச்சுவார்த்தைகளின் சாராம்சங்கள், கொள்கைகள், அறிக்கைகள், முதலீட்டாளர்கள் உதவி வழங்குவோர் மற்றும் கடன் வழங்குவோர்களுடனான பேச்சுவார்தைகளின் குறிப்புகள், அமைச்சரவை சிபாரிசுகள் மற்றும் தீர்மானங்கள், பாராளுமன்ற ஆவணங்கள், நீதித்துறை நடவடிக்கைகள், அரசாங்கச் செயற்பாடுகள் சர்வதேச அறிக்கைகள் மற்றும் , அரசாங்கத்திற்குள்ளான குறிப்புகள், நிறைவேற்று ஆணைகள், வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் கணக்குகள், பொதுச் செலவினங்கள் பற்றிய மதிப்பீடுகள், நிபுணத்துவ ஆலோசனைகள், சிபாரிசுகளும் வழிகாட்டல்களும், திணைக்களக் கூட்டங்களினது குறிப்பு விளக்கம், புள்ளி விபரத் தரவுகள், செயலணிக் குழுக்களின் அறிக்கைகள், ஆணைக்குழுக்கள் மற்றும் செயலணிகள், சமூக ஆய்வுகள், சுகாதார, கல்வி மற்றும் உணவு இருப்பு பற்றிய ஆய்வுகள் சனப் பெருக்க மற்றும் தொழில் முறை பற்றிய மதிப்பீடுகள் பாதுகாப்புத் தயார்படுத்தல்கள் மற்றும் கொள்வனவு பற்றிய ஆய்வுகள், வரைபடங்கள், இயற்கை வளங்கள் பற்றிய கற்கைகள், சூழல் தரத்தினை உறுதி செய்யக்கூடியவைகள், நீர் மற்றும் வளி மாசடைதல், விரிவான தனிப்பட்ட ஆவணங்கள் உட்பட இன்னும் பல அடங்குகின்றன.

தகவல்களை அறிந்து கொள்வது மற்றும் பெற்றுக்கொள்வது என்பது, சுத்தமான வளி மற்றும் குடிநீர் போன்று ஒரு பொதுச் சொத்தாகும். இது அரசுக்கோ அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்திற்கோ அல்லது அரச அதிகாரிகளுக்கோ சொந்தமானதல்ல. அது பொது மக்களுக்கே உரித்தானதாகும். அதிகாரிகள் தமது சொந்த நன்மைக்காக மாத்திரம் தகவல்களை உருவாக்குவதில்லை. சட்ட ரீதியாக சாதாரணமாக மக்களுக்குச் செய்யும் சேவை காரணமாகவே அரசாங்கத்தின் கடமைப்பாட்டின் மீது தகவல் உருவாக்கப்படுகின்றது. மக்களால் செலுத்தப்படும் வரிப்பணத்திலிருந்து மக்களுக்கான தகவல் உருப்பெறுகின்றது. எனவே இதனை காரணமேதுமின்றி மக்களிடமிருந்து இத் தகவல்களை மறைத்து வைக்க முடியாது.

“எம்முடையது போன்ற அரசாங்கமுள்ள நாடொன்றில், மக்களின் சகல முகவர்களும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். வெளிப்படுத்த முடியாத இரகசியங்கள் ஒரு சிலவே இருக்க முடியும். மக்களுக்காக பொது நடவடிக்கைகளை நிறைவேற்றும் அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் சகல பொது நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உள்ளது. அரச அதிகாரிகள் அவர்கள் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகள் பற்றி விளக்க அல்லது நியாயப்படுத்த வேண்டிய அவர்களது பொறுப்பாகும். அது அடக்குமுறை மற்றும் ஊழலுக்கு எதிராகவுள்ள பிரதான பாதுகாப்பாகும்.”

நீதியரசர் கே. கே. மெதிவ்
இந்திய உயர் நீதிமன்றம்

## அதிகாரம் வாய்ந்தவர்களால் மறைத்து வைக்கப்படல்

பொதுநலவாய நாடுகளில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் வறுமையில் வாழ்கிறார்கள் என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதும் பொதுநலவாய நாடுகளில் வாழும் மக்கள் பௌதீக ரீதியாக மாத்திரமல்லாது தகவல் அறிந்து கொள்வதிலும் பெற்றுக்கொள்வதிலும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

பத்திரிகைகள், வானொலி அல்லது தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்களை பார்க்கும் படிக்கும் சந்தர்ப்பம் இல்லாமை அல்லது பலர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளமையே இதற்கு காரணமாகும். எனினும், அதற்கு முக்கிய காரணம் அரசு வேண்டுமென்று சேகரித்து வைத்துள்ள முக்கிய தகவல்களை மக்களுக்கு மறைப்பதாகும். அப்படியானால் மக்களை விலங்குகளாக்கும் வகையில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அல்லது பௌதீக அபிவிருத்தியை வழங்காமை மற்றும் சமமான வகையில் மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொள்ளும் மற்றும் தெரிந்து கொள்ளும் வழிகளை தடுப்பதாகும். துரதிஸ்டவசமாக தகவல்கள் இரகசியம் என்ற அகம்பாவம் பொதுநலவாய நாடுகளில் ஆட்சியாளர்களுக்கும், ஆளப்படுவோருக்குமிடையிலான உறவில் பிரதான முதன் நிலையாக எப்போதும் விளங்குகின்றது. நீதியானதும் ஏழைகள் சார்பான ஆட்சி முறையை வழங்கத் தவறியமைக்காக அரசாங்க அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் மிகவும் அரிதாகவே பொறுப்புகூறும் பொறுப்புக்குள்ளாக்கப்படுகின்றனர். காலனித்துவ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மக்களுக்கான எக்கடமைக்கும் பொறுப்பாக

இருக்கவில்லை மேலும் அவர்களின் அதிகாரத்தைக் காட்டும் வகையில் வேண்டுமென்றே மக்களிடமிருந்து விலகியே இருந்தனர். இரகசியம் பேணும் கலாசாரம் அரசாங்க முறைமை மற்றும் வழக்கில் இருந்து வியாபித்து தகவல்களைப் பதுக்கி வைப்பதானது சுதந்திரத்திற்குப் பின்பான காலப்பகுதியில் காணப்படுகிறது. உதாரணமாக கென்யாவில் மொயி - ஈராவின் ஆட்சியில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள அல்லது வழங்குவதானால் ஏற்படும் விளைவுகள் பற்றி அச்சம் காரணமாய் அதிகாரம் ஜனாதிபதியிடம் குவிந்து காணப்பட்டதோடு அது எந்த அளவிற்கு என்றால் செரிகாலி (கிஸ்வாஹிலி மொழியில் அரசாங்கத்தைக் குறிக்கும் சொல்) அதன் மறு பெயர் சிரிகாலி (பரம இரகசியம்) என்பதாகும்.

ஒரு சில நாடுகள் மறுசீரமைப்பைச் செய்தாலும், பல நாடுகள் பெரும் ஆர்வத்துடன் சுயாதிபத்திய சின்னத்துடன் இரகசியத்தன்மையை பேணி வந்ததுடன் அதன்படி அடிமைத்தனத்திலிருந்து அரசமைப்புடனான நிர்வாகத்திற்கு மாற்றம் பெற்ற போது எதுவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள், மற்றும் குற்றவியல் அவதூறு சட்டங்கள், வெளிப்படையான அவதூறு மற்றும் சிறப்புரிமைச் சட்டம் ஊடாக மற்றும் இரகசிய ஒழுங்கு விதிகள் மேலும் மட்டுப்படுத்தப்பட்ட சிவில் சேவை போன்ற சட்டப் புத்தகங்களில் அடங்கியுள்ள அனைத்தும் அரசாங்கத்தின் இரகசியத்தை மீறுவோரை தண்டிக்கும் வகையில் அமைந்துள்ளன. சிம்பாப்வேயின் முன்னாள் பிரதம நீதியரசர் கெபே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சூழல் விஞ்ஞானம் தொடர்பாக ஆர்வமுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரச பாதுகாப்புடன் எந்தவித சம்பந்தமுமில்லாத நாட்டின் வட – கிழக்கில் தேசிய சரணாலயம் ஒன்று நிறுவப்படுவது சம்பந்தமான தகவலை அரசாங்க அதிகாரி ஒருவர் மூலமாக வெளியிட முயன்றமைக்காக இரகசிய சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டார். இச்சட்டத்தின் வரம்புகள் அந்த அளவிற்கு விரிந்துள்ளன. ஒரு சிவில் அதிகாரி எத்தனை தேநீர் கோப்பைகள் அருந்தினார் என்பது பற்றிய செய்தியை அதிகாரமின்றி வெளியிடுதல் அல்லது அரச அதிகாரிகள் தினமும் தேநீர் அருந்துகிறார்கள் என்ற உண்மையை வெளியிடுவது கூட அபராதத்திற்குரிய குற்றமாகும். துரதிஷ்டவசமாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு இயல்பான உரிமை உண்டு என்பதனை பல அரசாங்கங்கள் இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு தகவல்களை வழக்கமாக சகலருக்கும் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் கடமை என்பதனைக் கூட ஏற்றுக் கொள்வதில்லை.

இலங்கை அரசமைப்பின் முகவுரையில் நாட்டின் இறைமை மற்றும் அரசாங்கத்தின் அதிகாரத்தின் வளங்கள் மக்களே எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் குடியேற்ற கால இரகசியங்களைத் தொடர்ந்தும் பேணும் நோக்கில் பல சட்டங்கள்

தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன. 1955 இல் நிறைவேற்றப்பட்ட உத்தியோகபூர்வ இரகசிய சட்டமூலம் (ஓ.எஸ்.எ) முன்னாள் குடியேற்ற ஆட்சியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 1911 இன் சட்டத்துக்கு மிகவும் நெருங்கியதாக உள்ளது. அரச இரகசியங்கள் தொடர்பான வரைவிலக்கணம் மிகவும் பரந்ததாக உள்ளது. அது அதன் எல்லைக்குள் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் ஆயுதப் படைகள் சம்பந்தப்பட்ட சகல தகவல்களையும் உள்ளடக்குகின்றது. அரசாங்க அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட தாபனக் கோவை எனும் விதி உத்தியோகபூர்வ தகவல்களை அரசாங்கத்தின் உரிய அதிகாரமின்றி பொது மக்கள் எவருக்கும் வெளியிடுவதனைத் தடை செய்கின்றது. 1973 ஆம் ஆண்டு இலக்கம் 5 பத்திரிகை சபை சட்டமூலத்தின் படி அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடுவதற்கு தடைசெய்கின்றது. அரச இரகசியங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் வெளியிடுவதற்கு தடைவிதிக்கும் சட்டம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[7] இச்சட்டம் ஊடகங்களை அவதானிக்கக் கூடிய காவல் நாய் ஒன்றாக, பத்திரிகை மன்றம் ஒன்றை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது. ஏழு வருடங்களுக்கு முன் இரு தரப்பு பிரேரணை ஒன்றின் மூலம் இயங்கச் செய்யாமலிருந்த பத்திரிகை மன்றத்தை மீண்டும் உயிர்ப்பிக்க 2009 ஜூலையில் அரசாங்கம் தீர்மானித்தது.[8] இலங்கை அரசு 1945 பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்தி பயங்கரவாதிகளுக்கு எதிராக படையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அறிக்கையிடுவது தொடர்பாக ஊடகங்களுக்கு தடைவிதிப்பதற்காக ஒழுங்கு விதிகளை விதித்துள்ளது.[9]

## அடிப்படை மனித உரிமை

தத்தமது திறமைகளை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அந்த உரிமைகள் தொடர்பாக முழுமையாக அனுபவிப்பதற்காக தகவல்களை அறிந்து கொள்ளும் மற்றும் பெற்றுக்கொள்ளும் வழிகள் மறைக்கப்பட்டிருப்பது பெரும் தடையாக உள்ளது. தனிமனித ஆளுமையானது அரசியல், சமூக தன்மை பொருளாதாரம் மற்றும் திறமை ஆகிய அனைத்தும் ஒவ்வொரு மனிதனுக்கும், பாரிய அளவில் சமூகத்திற்கு கிடைக்கக் கூடிய தகவல்களை அறிந்து கொள்வது மற்றும் பெற்றுக்கொள்வதிலேயே தங்கியுள்ளது. தகவல்களை மக்களிடமிருந்து மறைத்து வழமை போல் வைத்திருக்கும் பழக்கம் மக்களை அடிமைகளாகவே உருவாக்கும். அத்தோடு இது அவர்களது உரிமைகளை மீறுவதாகும். இது ஐக்கிய நாடுகள் சபையில் 1946 இல் அதன் ஆரம்பத்திலேயே அங்கீகரிக்கப்பட்டது. "தகவல் சுதந்திரம் ஓர் அடிப்படை மனித உரிமையாகும். இது சகல உரிமைகளுக்குமான உரைகல் ஆகும். அதற்கு ஐக்கிய நாடுகள் தலை வணங்குகிறது." என பொதுச்

சபை உறுதி கொள்கின்றது.[10] மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு தகவல் உரித்துரிமைச் சட்டம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சாசனத்தில் (ICCPR) 19வது சரத்தில் சட்டரீதியாக கட்டாயப்படுத்தப்பட்ட உடன்படிக்கை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் கருத்துக் கூறும் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உள்ளது. இவ்வுரிமை தலையீடுகள் இன்றிய கருத்துக் கொள்ளல் மற்றும் எல்லைகள் அற்று எந்தவொரு ஊடகம் மூலமாகவும் தகவல் மற்றும் கருத்துரைகளைச் சேகரிக்க பெற்றுக் கொள்ள மற்றும் அறிவிக்கும் உரிமையை உள்ளடக்கும்.[11] இது தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை சர்வதேச மனித உரிமை சட்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இலங்கை 1980 இல் ஐஊஊஸீசு இல் இணைந்ததன் மூலம் அதன் சகல பிரஜைகளுக்கும் இவ்வுரிமையை உறுதிப்படுத்த சட்டத்தின்படி கடமைப்பட்டுள்ளது.[12]

**அனர்த்தத்தின் போது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.**[13]

1983 முதல் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் நீண்ட காலமாக நீடித்த சிவில் யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளையும் மற்றும் கிராமங்களையும் கைவிட்டு முகாம்கள் மற்றும் பழக்கப்படாத பிரதேசங்களில் வாழ்வதற்கான நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த யுத்தம் இறுதி கட்டத்துக்கு அதாவது யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு பெருந்தொகையாக நாட்டின் வடக்கில் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. உள்ளக ரீதியில் இடம் பெயர்ந்த மக்களாக அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் அத்தியாவசியத் தேவைகளான உணவு மற்றும் இருப்பிடங்களை வழங்கி அவர்களை பாதுகாப்பாக வசிக்க அவர்கள் அரசை நம்பியிருந்தனர். எப்படியிருந்தும் நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் போது அது இரகசியமாகவும் தாமதமாகவும் இடம்பெற்றது. மக்கள் பெரும்பாலும் தமக்கு உணவு கிடைக்குமா அது எந்தளவு அது எந்த இடத்தில் என்பது தொடர்பாக ஒவ்வொருவரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தது. அதே போல் அந்தப் பொருட்களை பெற்றுக்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை என்ன என்பதை அவர்கள் அறியாமல் இருந்தனர். தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையொன்று இல்லாமை தமக்கு உண்மையாகக் கிடைக்க வேண்டியவைகள் பற்றி அறியவும் மற்றும் உணவு, நிவாரணம் பகிர்ந்தளிக்கும் கொள்கை பற்றியும் அரசாங்கத்தை வினவும் சந்தர்ப்பம் மக்களுக்கு மறுக்கப்படுகின்றது. தகவல் பற்றாக்குறை, பாராபட்சம் காட்டல்,

தன்னிச்சையாக இயங்கல் தலைதூக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற அரசியல் யாப்பு அல்லது சட்டப்படியான கடப்பாடு இல்லாமையினால் அரச அதிகாரிகளினது நடவடிக்கைகள் அல்லது அசட்டைகள் பற்றி அரசாங்கத்திடம் வினவவோ அல்லது அரசாங்கத்தினை பொறுப்பாளியாக்கவோ முடியாது.

2004 இல் இலங்கையின் கரையோரப் பகுதியில் என்றுமில்லாதவாறு அழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயரக் காரணமாக அமைந்தது. 2005 முதல் சர்வதேச சமூகம் பல பில்லியன் டொலர்களை நிவாரணமாக வழங்கியுள்ளது. நிவாரண மற்றும் புனர்நிர்மாண வேலைகள், தொற்று நோய் போன்று ஊழலில் சிக்குண்டுள்ளதோடு பாரிய அளவில் நிதி சூறையாடப்படுவதாகவும் குற்றஞ் சாட்டப்படுகின்றது. குடியிருப்புகளினது புனர்நிர்மாணம் மற்றும் உயிர் தப்பியவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் போன்ற செயற்பாடுகள் பற்றி ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களும் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டுமெனக் கோரியுள்ளன.[14]

**இதுதான் சரி**

மக்களது உரிமையாக தகவல்களை பெற்றுக்கொள்ள வழியமைப்பது மிக முக்கியமாகும்.

- ஜனநாயக வழிமுறைக்காக அதை பாதுகாக்கும் உரிமை மற்றும் முறையான நிர்வாகம் ஏனைய சகல மனித உரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்காக முக்கியமான விடயமாகவிருப்பது
- அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கடமைப்பாட்டின் ஒரு பகுதியாகும். அதாவது தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை அரசினால் வழங்கப்படும் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கின்றது.
- சட்டப்படி அமுல்படுத்தக் கூடிய உரிமையை அரசாங்கத்தின் விருப்பத்தின்படி குறுகியதாக்கவோ அல்லது உதாசீனப்படுத்தவோ முடியாமையினால் தகவல் அரசாங்கத்தினால் அதன் தீர்மானத்தின்படி மக்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்பாகவே கருதப்படும். வெறும் நிர்வாக நடவடிக்கை என கருதி அதிலிருந்து தூரமாகுதல்.

- கடமையை தன்னகத்தே கொண்டவரை ஒரு பக்கமாகவும் சட்ட உரித்துடைய நன்மை பெறுபவரை மறுபக்கமாகவும் உருவாக்கும். தகவல் வெளியிடப்படாமை ஒரு உரிமை மீறலாகும். மேலும் நன்மை பெறுவோர் சட்ட விமோசனம் தேட முடியும்.
- தகவல் அரசாங்கத்திற்கு அல்ல பொது மக்களுக்கே சொந்தமானது என சமிக்ஞை காட்டுகின்றது. வெளியிடுவதற்கு விசேட காரணம் இல்லையேல் சகலதும் இரகசியம் என்ற கருத்து சகல தகவல்களும் கிடைக்கப்பெறும், அவற்றை மறுப்பதற்கான உறுதியான காரணம் இல்லை என்பதனைக் கொண்டு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களை வெளிப்படுத்த மறுப்பது பற்றிய காரணத்தை நிரூபிக்கும் பொறுப்பு பதவி வகிப்பவரையே சாரும்.
- பொறுப்புக் கூறுவதில் உயர் தர நிர்ணயத்தை ஏற்படுத்துகின்றது.
- பல அரசாங்கங்களின் நடவடிக்கைகளில் இன்னும் செல்வாக்குள்ள திறந்த மற்றும் வகை கூறுதலுக்குள்ள சட்ட மற்றும் நிறுவனத் தடைகளைத் தாக்குவதற்குப் பிரஜைகளுக்குச் சட்ட அதிகாரம் வழங்குகின்றது. இது கட்டுப்பாட்டின் இருப்பிடத்தை அரசிடமிருந்து மக்களுக்கு மாற்றி மக்களுக்கான இறைமையை மீண்டும் வழங்குகின்றது.

தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமை ஏனைய சகல மனித உரிமைகளையும் வலுப்படுத்துகின்றது. உதாரணமாக பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் சிந்தனை உரிமை அபிப்பிராயங்களை உருவாக்கப் போதுமான தகவல் பெற்றுக் கொள்வதிலேயே தங்கியிருக்கின்றது. தனிப்பட்ட தற்காப்பிற்கான உரிமையை அடைந்து கொள்வதற்கும் மக்கள் அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளப் போதுமான தகவல்களை பெற்றிருக்க வேண்டும் என்பதும் ஒரு தேவையாகும். கனடாவில் பாதுகாப்பிற்கான உரிமை தனிப்பட்ட தற்காப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல் பற்றிய தகவல்களுக்கான நியாயமான உரிமையை உருவாக்குகின்றது என்பதனை ஓர் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.[15] பொலிஸார் இவ் அச்சுறுத்தல் பற்றி அறிந்திருந்து இது பற்றி அச்சுறுத்தலுக்குள்ளான நபருக்கு அறிவிக்கத் தவறின் அவரது பாதுகாப்பை மீறுவதாகும். உணவிற்கான உரிமையும் பெரும்பாலும் தகவலுக்கான உரிமையிலேயே தங்கியுள்ளது. உதாரணமாக இந்தியாவில், மக்கள் தமது உணவு மானிய உரிமைகள் பற்றி அறிந்து கொள்ள சட்டங்களைப் பயன்படுத்தியுள்ளனர். சமூகத்தில் ஏழைகளுக்காக ஒதுக்கப்படும் உணவுப் பொருட்கள் வஞ்சகமாக திசை திருப்பப்படும் போது அவை பற்றியும் வெளிக் கொணர முடியும்.[16] மனித உரிமைகள் கருத்துரையாடல்களில் தகவல் உரித்துரிமை பிரதானமாக விளங்குகின்றது.

ஏனெனில் தமது உரிமைகளை மிகவும் கருத்துள்ளதாய் செயற்படுத்தவும், அவர்களின் உரிமைகள் அச்சுறுத்தலுக்குள்ளாகும் போது அது பற்றி மதிப்பீடு செய்யவும் மேலும் ஏதாவது உரிமை மீறலுக்கு யார் பொறுப்பு எனத் தீர்மானிக்கவும் இது பிரஜைகளுக்கு உதவுகின்றது.

தகவல் உரித்துரிமையானது தகவல் தேடும் உரிமையைக் கொண்டுள்ளது. அத்தோடு தகவல்களை தேடிச்செல்லல், ஒழுங்கு செய்தல் மற்றும் அதனை இலகுவில் பெற்றுக் கொள்ளவும் தகவல் அளிப்பதும் கடமையாகும். பொது மக்கள் நலனுக்காக மாத்திரம் என நிரூபிக்கப்படும் போது மாத்திரம் தகவல்களை பதுக்கி வைக்க முடியும். தகவல் அடை வழியை ஏற்படுத்தும் கடமை அரசாங்கத்திலேயே தங்கியுள்ளதோடு இரு பிரதான நிலைகளை உள்ளடக்குகின்றன.[17] வேண்டுதலின் பேரில் பிரஜைகள் தகவல்களை அடைய உதவுதல் முக்கியமான தகவல்களை முன் கூட்டியே அறிந்து பகிர்ந்தளித்தல்.

## தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமை தொடர்பாக இலங்கையின் நிலை

அரசாங்கத்திடமிருந்து மக்கள் தகவல்களை பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக இலங்கையின் அரசியலமைப்பில் ஷரத்துக்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும் சட்டத் தீர்ப்புக்கள் தகவலை அடையும் மக்களின் உரிமை ஏனைய அடிப்படை உரிமைகளில் இயற்கையாய் அமைந்த ஒரு பிரிவு என சில சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொண்டுள்ளன. 1984 இல் ஜனநாயகத்தில் பொதுக் கலந்துரையாடல் முக்கியமானது என்றும் அவ்வாறான கலந்துரையாடலை அடைந்து கொள்வதற்கு தகவலை பெறுபவர் என்ற நபர் ஒருவரினது உரிமை மிக முக்கியமெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே தகவலைப் பெற்றுக் கொள்ளும் உரிமை அரசியலமைப்பின் ஷரத்து 14 (1) (அ) இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தில் உணர்த்தப்பட்டுள்ளது.[18] ஒரு தசாப்தத்திற்கு பின்பு உயர் நீதிமன்றம் இந்நிலைப்பாட்டை மீளாய்வு செய்து தகவல் அறியும் உரிமை உண்மையிலேயே அரசியலமைப்பின் ஷரத்து 10 இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக் கொள்வதற்கும் மற்றும் அபிப்பிராயம் கொண்டிருப்பதற்குமுள்ள அடிப்படை உரிமையில் உண்மையாக இயற்கையாய் அமையப் பெற்றுள்ளது. எனத் தீர்ப்பளித்துள்ளது.[19] ஒலிபரப்பு அதிகார சபை மசோதா, அரசியலமைப்புடன் முறிவுபட்டதா? என்ற தீர்ப்பிற்காக கொண்டுவரப்பட்ட போது இலங்கையின் உச்ச நீதிமன்றம் இத்தீர்ப்பினை மீண்டும் வலியுறுத்தியது.[20] மிக அண்மையில் காலி முகத்திடல் வழக்கில் ஒரு

விடயத்தில் பொது ஆர்வம் முக்கியத்துவம் பெறும் போது அரச மற்றும் உத்தியோகபூர்வ செய்திப் பரிவர்த்தனையில் உள்ள இரகசியமான செய்தியைக் கூட பொது நன்மை கருதி அரசாங்கத்திடமிருந்து சம்பந்தப்பட்ட தகவலைப் பெற்றுக் கொள்ளும் "வெளிக்காட்டப்படாத" உரிமை ஒரு நபருக்கு உண்டு என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது கருத்து வெளியிடும் உரிமையை அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறான பிரகடனத்தின் பின்பும் அரசாங்க இலாகாக்களிலிருந்து பிரைஜைகள் இலகுவாக தகவல்களைப் பெற முடியாதுள்ளது. ஷரத்து 14 (01) (ய) இன் பரப்பை மேலும் உறுதிப்படுத்துவதாக 2000 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பு வரைபுபடுத்தப்பட்டது தற்போதுள்ள பேச்சு மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தினுள் தகவல்களை தேடுதல், பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அறிவிக்கும் சுதந்திரத்தை உள்ளடக்கவே இவ்வரைவு மேற்கொள்ளப்பட்டது.[23] எவ்வாறாயினும் இவ் உத்தேச திருத்தம் சட்டமாக்கப்படவில்லை மேலும் உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்ட இரகசியம் இலங்கையில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. அதன் செயற்பாடுகளில் எதனைப் பிரஜைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் மத்தியஸ்தராக இயங்குகின்றது.

## பொதுநலவாய சபையின் செயற்பாடுகள்

இலங்கை உட்பட பொதுநலவாய நாடுகள் பல தடவைகளில் தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமையின் அடிப்படை முக்கியத்துத்தை வலியுறுத்தியுள்ளன. "மக்களுக்கு உத்தியோகபூர்வ தகவல்களைப் பெற போதியளவு வழி இருக்கும் போது ஜனநாயக மற்றும் அரசாங்க செயற்பாடுகளில் பொது மக்கள் பங்கு கொள்ளல் மிகவும் அர்த்தமுள்ளதாயிருக்கும்." பொது நலவாய நீதி அமைச்சர்கள் 1980 இல் பிரகடனப்படுத்தியிருந்தனர்.[24] அது தொடக்கம் கொள்கை அறிக்கைகள் அங்கத்துவ நாடுகளை பின்வருவனவற்றில் ஊக்கமளித்தது. "தகவல் சுதந்திரத்தை சட்ட மற்றும் அமுல்படுத்தக் கூடிய உரிமையாகக் கருதவும்"[25] பொது நலவாய செயலகம் வழிகாட்டல்களைக் கூட தயார் செய்தது.[26] மேலும் இது விடயமாக மாதிரிச் சட்டம்[27] ஒன்றையும் உருவாக்கியது.

உத்தியோகபூர்வ பொது நலவாயம், அதாவது அரசாங்கங்களுக்கிடையிலான முகவர் நிலையங்கள் மற்றும் கூட்டங்கள், அதன் நடவடிக்கைகளை மக்களுக்காகத் திறக்க சில முயற்சிகளை மேற்கொண்டது. எனினும், அது இன்னும் வெகு தூரம் செல்ல

வேண்டியுள்ளது. விசேடமாக, பொது நலவாயச் செயலகம் அதிகபட்ச தகவல் வெளிப்படுத்தல் பற்றிய வெளிப்பாடான மற்றும் முழுமையான கொள்கை ஒன்றை மேற்கொள்வதன் மூலம் உதாரணம் காட்ட வேண்டும். அவ்வாறான கொள்கை ஒன்று இல்லாதவிடத்து, பிரஜைகளுடன் தகவல் பரிவர்த்தனை செய்வதில் ஆர்வமின்றி விலகி நின்று அதன் கௌரவத்தை விட்டும் விலகி பொது நலவாயம் போராட்டத்தைத் தொடரும்.

**தனியார்....பொதுவாவது எச்சந்தர்ப்பத்தில்?**

அரசாங்க அல்லது தனியார் கூட்டுத்தாபனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச பங்கீடுள்ள நிறுவனங்கள் இலட்சக் கணக்கான மக்களின் தலைவிதியில் செல்வாக்குச் செலுத்தும் உலகில் தகவல் உரித்துரிமையின் வரம்புகள் வெறும் அரசாங்கத்தினைத் தாண்டிச் சென்று உள்ளடக்கப்பட வேண்டும். சில நாடுகள் அவர்களது சட்டத்தின் உள்வரம்புகளை ஒரு சில தனியார் நிறுவனங்கள் வரை நீடித்துள்ளன.[28] இப்பிரச்சினைகள் மக்களின் அடிப்படை ஆர்வங்களைப் பாதுகாக்கும் பணிக்கு மேற்கோள் காட்டுவதனை முடிவாகக் கொள்வதன் அவசியத்தை அங்கீகரிப்பதல்லாமல் தோற்றுவாய் அல்லது வேண்டப்படும் தகவல்களை வைத்திருக்கும் நிறுவனத்தினது அமையப் பெற்ற பண்புகளை மேற்கோள் காட்டுவதில் பயன் இல்லை.[29]

சுகாதாரப் பராமரிப்பு, நீர் வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சிறைச்சாலை முகாமைத்துவம் போன்ற பொது நடவடிக்கைகள் தனியார் மயப்படுத்தப்படுவதால் மக்கள் இச்சேவைகளை நிறைவேற்றுவோரிடமிருந்து தகவல் பெற முடியுமாயிருக்க வேண்டும். அரசாங்கத்திற்கும் சேவை வழங்குவோரிடையேயும் அடிக்கடி செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் அவர்களது நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மக்களுக்குக் கிடைக்கப் பெறச் செய்ய வேண்டும் என்ற தேவை உட்படுத்தப்படுவதில்லை. இது அரசாங்க அதிகாரத்திலிருந்து தகவல்களை விலக்கிவிடுகின்றது. இல்லையேல் இவை தகவல் அடை வழி சட்டத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கும். தனியார் நிறுவனங்கள் பொதுச் சேவைகளை வழங்காத போதிலும் கூட அவர்களின் சேவைகள் மக்களின் உரிமைகளைத் தாக்கக் கூடியனவாயின் அவர்களின் நடவடிக்கைகள் பொது ஆய்வுக்கு உட்படுத்தக் கூடியதாயிருக்க வேண்டும். உதாரணமாக,

ஒரு ஆலையின் சுற்றாடல் முகாமைத்துவக் கொள்கை பற்றிய தகவல்களை மக்கள் அறியக் கூடியதாயிருக்க வேண்டும். இதன் மூலம் ஆலையானது நஞ்சுகள் அழுக்குகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் மக்களின் சுகாதார உரிமையைக் குறைக்கவில்லை என்பதனை நிச்சயித்துக் கொள்ள முடியும்.

2000 தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழி தொடர்பான சட்டமூலத்தின் கீழ் தென்னாபிரிக்க தனியார்துறை மீது தகவல்களை வெளிப்படுத்தும் அவர்களுக்குள்ள இணக்கப்பாட்டை கட்டாயப்படுத்தி தென்னாபிரிக்கா முன்னோடியாகச் செயற்பட்டது சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 50 இன் கீழ் ஏதாவது உரிமைகள் மேற்கொள்ள அல்லது பாதுகாக்க பதிவுகள் தேவையெனின் தனியார் நிறுவனங்களின் தகவல்களைப்பெற ஒருவரால் முடியும். இது ஓர் மிகவும் பரந்த நிபந்தனையாகும்.[29]

இந்தியாவின், 2005 தகவல் உரித்துரிமைச் சட்டம் தனியார் துறையையும் ஓரளவிற்கு உள்ளடக்குகின்றது. ஏனெனில் எவராவது உரிமை கொள்ளும், கட்டுப்படுத்தும் அல்லது போதுமான அளவில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நேர்முகமாக அல்லது மறைமுகமாக நிதியிலிருந்து என சேர்க்கப்பட்டுள்ளது. இதன் கருத்தானது, அரசாங்கத்திடமிருந்து மானியம் அல்லது சலுகைகளைப் பெறும் தனியார் நிறுவனங்கள் இச்சட்டத்திற்கு உட்படுத்தப்படும். புதுமையாக, தற்போது அமுலில் உள்ள வேறு ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் அரசாங்க அதிகாரி ஒருவருக்கு அடை வழி உள்ள எந்தவொரு தனியார் நிறுவனம் சம்பந்தமான தகவல்களைப் பெற சட்டம் பொது மக்களுக்கு வழி அமைக்கின்றது.[30] இது தற்போதுள்ள சட்டம் அல்லது உப சட்டம் ஒன்றின் கீழ் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து உதாரணமாக சூழல் தாக்க அறிக்கை, தீங்கிழைக்கக் கூடிய கழிவுப் பொருட்களை அழிப்பது பற்றிய திட்டம் அல்லது நிதி அறிக்கை பற்றி திட்டம் அல்லது நிதி அறிக்கை பற்றி பொது நிறுவனம் பெற்றுக் கொள்ள வேண்டிய அறிக்கையைப் பெற்றிராத நிலையிலும்கூட அவ் அறிக்கைகளைப் பார்க்க வேண்டுமென நபரொருவர் கோரிக்கை விடலாம். பொது நிறுவனம் தனியார் நிறுவனத்திடமிருந்து அவ் அறிக்கையைப் பெற அதன் அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். மேலும் இதனை வேண்டியவருக்கு வழங்குவது பற்றி பொது நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நேபாளம்[30] மற்றும் வங்காள தேசத்தில்[31] உள்ள தகவல் பெற்றுக்கொள்ளும் சட்டங்கள் அரசாங்கத்தினால் அல்லது வெளிநாட்டு

முகவர் நிலையங்களினால் நிதி உதவி அளிக்கப்படுமாயின் அரச சார்பற்ற நிறுவனங்கள் தகவல் வெளியிட வேண்டும் என்ற கடப்பாடு வைக்கப்பட்டுள்ளது.

## மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம்

தகவல் உரித்துரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் பற்றி இலங்கையும் ஆரம்ப உறுப்பினராக உள்ள பொது நலவாய அரசாங்கங்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியதன் தேவையில்லை. 80 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமையைப் பாதுகாக்கும் குறிப்பிட்ட சட்டம் அமுலில் உள்ளதோடு பல நாடுகளில் அண்மையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புகளில் இந்த உரிமையை உறுதிப்படுத்தும் விசேட நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை எழுதும் வேளையில் 53 பொதுநலவாய தேசங்களின் 15 இல் அன்டிகுவா மற்றும் பர்முடா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பெலீஸ், கனடா, இந்தியா, ஜமய்கா, மோல்டா, நியுஸீலாந்து, பாகிஸ்தான் (கட்டளைச் சட்டம், இயற்றப்பட்ட சட்டம் அல்ல) தென் ஆபிரிக்கா, புனித வின்சன்ட் மற்றும் கிலேனேடின், ட்ரினிடாட் மற்றும் டொபேகோ, உகண்டா, ஐக்கிய இராச்சியம் ஆகியன தகவல் உரித்துரிமையை உறுதிப்படுத்தி சட்டம் இயற்றியுள்ளன. இவற்றுள் சிலவற்றில் கருத்தூன்றிய குறைபாடுகள் இருக்கின்றன. உகண்டாவில் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அது இதுவரை பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. அது இயற்றப்பட்டு இரண்டு வருடங்களின் பின்பு புனித வின்சன்ட் மற்றும் கிரனேடிஸ் இல் அரசாங்கத்திற்கு வெளியே ஒருசிலர் மாத்திரம் தகவல் உரித்துரிமைச் சட்டம் பற்றி அறிந்துள்ளனர். தெற்காசியாவில் நேபாள தகவல் அடை வழிச் சட்டம் இரு வருடங்களுக்கு மேலாகியும் உரிமை உள்ளார்வத்துடன் ஆரம்பிக்கப்படவில்லை.

பலசந்தர்ப்பங்களில் பொதுநலவாய சபையை சேர்ந்த நாடுகளை அபகீர்த்திக்குள்ளாக்கும் வகையில் பகிரங்கத்தன்மை அரச நிர்வாகத்தில் காணப்படுகின்றது. எதிர்த்துச் செயலாற்ற வற்புறுத்தப்படும் போது சில நாடுகள் மிக மெதுவாய் வழி விடுகின்றன. வெளிப்படையான சட்டங்கள் மூலம் உரிமையை உத்தரவாதம் செய்ய மறுத்தனர். முடியுமானவரை தாமதிக்கச் செய்வதோடு மட்டுப்படுத்தப்பட்ட உரிமையே வழங்கப்பட்டது. ஆபிரிக்காவில் உள்ள கானா, கென்யா, மலாவி, நைஜீரியா, ஸியரலியோன், தன்ஸானியா மற்றும் ஸம்பியா, கரிபியனில் உள்ள பார்படோஸ், கயானா மற்றும் பசுபிக் சமுத்திரத்திலுள்ள பிஜி மற்றும் பபுவாநியுகினி ஆகிய நாடுகளின் அரசாங்கங்களினால் அல்லது சிவில் சமூகத்தினால் தயார் செய்யப்பட்ட வரைவுச் சட்டவாக்கம் ஆலோசனையில்

உள்ளது. தகவல் அடை வழி சம்பந்தமான நைஜீரிய சட்ட வரைவுக்கு பத்து வருடங்களுக்கு மேலாகின்றது. இச்சட்டத்தை 2008 இல் பாராளுமன்றம் அங்கீகரித்தது. ஆனால் அது தன்மையில் அதிக மிதவாதம் கொண்டது, எனக் கூறி அன்றைய ஜனாதிபதி ஒப்பமிட மறுத்தார். புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின் இந்த மசோதாவை மீண்டும் நிறைவேற்றச் செய்ய சிவில் சமூகம் மற்றுமொரு ஆதரவு தெரிவிக்கும் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. இதே போன்று கென்யாவில் தகவல் பெற்றுக்கொள்ளும் சட்ட வரைவை நிறைவேற்றச் செய்ய, மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால பிரச்சாரம் தேர்தலுக்கு முன் அதனைப் பாராளுமன்றம் நிறைவேற்றத் தவறியதனால் அது ஏமாற்றத்தில் முடிந்தது. பாராளுமன்றம் புதிதாக மாற்றியமைக்கப்பட்டதனால் இந்த சட்டமியற்றும் செயற்பாட்டையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சட்டம் இயற்றும் முயற்சி 1988 இல் முன்வைக்கப்பட்டது. 2003 இல் இவ்வரைவுச் சட்டமூலம் அரசாங்க ஊடகங்கள் மற்றும் வெளிப்படைத் தன்மை பற்றி ஆதரவாய்ப் பேசும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் குழுவினால் தயார் செய்யப்பட்டது. இவ்வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப் பெற்றது. எவ்வாறாயினும் 2004 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையினால் அதனைத் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இது விடயத்தில் அதிக அக்கறை காட்டாமையினால் அது பின்போடப்பட்டது.[32] ஏனைய சட்ட ஆட்சிகளில் உள்ள சிறந்த பழக்கங்களை உள்ளடக்கி இலங்கை சட்ட ஆணைக்குழு 2003 இல் தகவல் உரித்துரிமை வரைவு மசோதா ஒன்றை முன்வைத்தது.33 தயாரிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலம் அரசு உட்பட மிக நம்பிக்கையான உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவிப்பதாக செய்தி வெளியானது. எனினும் சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கு இந்த ஆலோசனை செயற்பாட்டுக்கு வழி கிட்டவில்லை. அண்மையில் முடிவடைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண யுத்தத்தில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியிருந்ததால் கடந்த வருடங்களில் இலங்கை தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறைக்காக நடவடிக்கைகள் மிக மெதுவாகவே இடம் பெற்றன.

## ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திக்கான வழிகள்

இலங்கை உட்பட பொதுநலவாய நாடுகள் நம்பிக்கை இழந்த நிலையில் தேடி அலையும் ஜனநாயகத்தை வேரூன்றச் செய்யவும் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் அரசாங்கங்கள் முக்கியத்துவம் அளிப்பதனைக் கருத்திற் கொள்ளும் போது பல அங்கத்துவ நாடுகள் தகவல் உரித்துரிமைச் சட்டத்தைப் பேணுவதில் தயக்கம் காட்டுவதில் ஆச்சரியம் ஏற்படுகின்றது. தகவல் உரித்துரிமையானது நல்லாட்சி,

| பிராந்திய மட்டத்தில் தகவல் உரித்துரிமைச் சட்டத்தை இயற்றியுள்ள 84 நாடுகள்[36] | | | | |
|---|---|---|---|---|
| ஐரோப்பா | | ஆசியா/பசுபிக் | அமெரிக்க நாடுகள் கரீபியன் | ஆபிரிக்கா |
| அல்பேனியா | கொஸோவா | அவுஸ்திரேலியா | அன்டிகுவா மற்றும் பர்மூடா | அங்கோலா |
| ஆமேனியா | கிர்கிஸ்தான் | பங்களாதேஷ் | அஜன்டீனா | தென் ஆபிரிக்கா |
| ஒஸ்த்திரியா | நெம்பியா | சீனா | அருபா | உகண்டா |
| பெல்ஜியம் | லிச்டென்ஸ்டைன் | குக் தீவுகள் | பெலைஸ் | சிம்பாப்வே |
| பொஸ்னியா | லித்துவேனியா | இந்தியா | கனடா | |
| பல்கேரியா | மெஸடோனியா | இஸ்ரேல் | கெய்மென் தீவுகள் | |
| குரோஸியா | மொல்டோவா | ஜப்பான் | சிலி | |
| செக் குடியரசு | மொன்டெனெக்ரோ | ஜோர்தான் | கொலம்பியா | |
| டென்மார்க் | நெதர்லாந்து | நேபாளம் | டொமினிக் குடியரசு | |
| எஸ்த்தேனியா | நோர்வே | நியுஸிலாந்து | டச்சு அன்தில்லஸ் | |
| பின்லாந்து | போலந்து | பாகிஸ்தான் | ஈகுவாடோர் | |
| பிரான்ஸ் | போர்த்துக்கல் | பிலிப்பைன்ஸ் | ஜமைக்கா | |
| ஜோர்ஜியா | ரோமேனியா | தென் கொரியா | ஹொண்டியுராஸ் | |
| ஜெர்மெனி | சேர்பியா | தாய்வான் | மெக்ஸிகோ | |
| கிறீஸ் | ஸ்லோவாகியா | தஜிகிஸ்தான் | நிகரகுவா | |
| ஹங்கேரி | ஸலோவேனியா | தாய்லாந்து | பனாமா | |
| ஐஸ்லாந்து | ஸ்பெய்ன் | உஸ்பகிஸ்தான் | பெரு | |
| அயர்லாந்து | சுவிற்ஸலாந்து | | ட்ரினிடாட் மற்றும் டொபாகோ | |
| இத்தாலி | துருக்கி | | ஐக்கிய அமெரிக்கா நாடுகள் | |
| கஸகஸ்தான் | உக்ரேன் | | | |
| | ஐக்கிய இராச்சியம் | | | |

வெளிப்படைத் தன்மை, வகை கூறல், பங்கு கொள்ளல் மற்றும் ஏழைகளுக்குச் சாட்டையாக விளங்கும் ஊழலை இல்லாது ஒழிக்கவும் அத்திவாரமிடுகின்றது. எனவே, கூரிய அறிவுள்ள பொருளியலாளர்களும் பெருந்தன்மையுள்ள மறுசீரமைப்பாளர்களும் முடியுமான அளவு இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## பங்கேற்றல் ஜனநாயகத்தை அர்த்தமுள்ளதாக்கல்

ஐக்கிய நாடுகள் சபையினதும், பொதுநலவாயத்தினதும் உறுப்பு நாடு என்ற வகையில் இவ்விரு நிறுவனங்களையும் வலுவூட்டும் வகையில் இலங்கை இவ்விரு நிறுவனத்தினதும் விழுமியங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்க வேண்டும். 1999 இல் தகவல் சுதந்திரம் பற்றிய ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி, தகவலை அடைவதற்கான மக்களின் திறந்த உரிமை மற்றும் அவர்கள் சார்பாக அரசாங்கங்கள் என்ன செய்கின்றன என்பது தெரியாவிட்டால் உண்மை பலம் இழந்து விடும் மற்றும் அரசாங்கத்தில் மக்களின் பங்களிப்பு துண்டித்துவிடும் என்பது கருத்துச் சுதந்திரத்தினுள் உள்ளடக்கமாயுள்ளது என அங்கீகரித்துள்ளது.[36] இதேபோன்று சுதந்திரம் மற்றும் ஜனநாயக அரசியல் செயற்பாடு மூலம் தாம் வாழும் சமூகத்தை நிர்மாணிப்பதில் பங்கெடுப்பதற்கான தனி நபருக்குள்ள மற்றும் மாற்றிக் கொடுக்க இயலாத உரிமையை 1991 இனது பொதுநலவாய ஹராரே மாநாட்டுப் பிரகடனம் அங்கீகரிக்கின்றது.[37] எவ்வாறாயினும் பொதுநலவாயத்தின் சகல உறுப்பினர்களும் இந்த உத்தரவாதத்தை ஜனநாயகத்திற்கு அளித்துள்ள அதேவேளை பல நாடுகளில் ஜனநாயகக் கொள்கையான நல்லாட்சி, வெளிப்படைத் தன்மை மற்றும் வகைகூறல் பெரும்பாலும் பலம் இழந்துவிடும். உண்மை யாதெனில் காலத்துக்குக் காலம் இடம்பெறும் தேர்தல்களும் செயற்பட்டு வரும் அதிகாரிகள் வர்க்கமும், அரசாங்கமானது மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டது அல்லது மக்களை உட்படுத்தியது என்பதனை உறுதி செய்வதில்லை. இதற்கப்பாற்பட்ட சில விடயங்கள் தேவைப்படுகின்றன. மரபு ஒத்ததிலிருந்து கலந்தாலோசிக்கும், பதிலளிக்கும் மற்றும் பங்கேற்கும் ஜனநாயகத்திற்கு மாறுவதற்கு தகவலுக்கான அடை வழி மிக முக்கியமாகும்.

**மக்களுக்கான அதிகாரம்**

தெளிவற்ற நம்பிக்கைகள் மற்றும் கற்பனைகளில் தங்கி நிற்பதற்கு பதிலாக, நல்ல நிலையிலான உண்மைத் தகவலை கையில் வைத்திருக்கும் மக்களால் அதிகாரத்தில் உள்ளவர்களை வகை கூற வைக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு. மிகவும் ஓரங்கட்டப்பட்டவர்கள் கூட நம்பிக்கையுள்ள ஊர்ஜிதம் செய்யப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கும் போது அவர்களின் சொந்த நலன் கருதி செயற்பட முடியும். உதாரணமாக அன்றாட ஊதியம் பெறும் ஒருவர், தமது சொந்தக்காரர் தமக்காக அரசாங்கத்திடமிருந்து பெறும் அதே ஊதியத்தை எமக்குத் தருகின்றாரா என்ற பதிவேட்டினை பரீட்சித்துப் பார்க்க முடியும் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் பொதுச் சுகாதார நிலையமொன்றின் நிறுவப்பட்ட தரம், வழிகாட்டலின் படி செயற்படுகின்றதா என பரீட்சித்துப்

பார்க்க முடியும். ஓய்வு பெற்ற ஒருவர் தனது உரித்துரிமைகள் பற்றி அரசாங்கம் வைத்துள்ள பதிவுகள் சரியானதும், நம்பிக்கைக்குரியதுமா? என பரீட்சித்துப் பார்க்கலாம். ஒரு சிறிய வர்த்தகர் தான் இழந்த ஒரு விலைமனுக் கோரல் நேர்மையற்ற முறையில் செல்வாக்குள்ள வேறொரு செல்வந்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அது பற்றி நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அரசாங்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிகளுக்கு எதிரே தமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பாதையின் தரம் பற்றி வதிவோர் ஒருவர் கேள்வி எழுப்பலாம். பிரஜைகள் குழு ஒன்று ஓர் அபிவிருத்தித் திட்டத்தின் பயன்பாடு பற்றி பரீட்சிக்க முடியும். சுற்றாடலுக்கு பாதகம் ஏற்படுத்தக் கூடும் என அறியப்படுமிடத்து அதன் ஆவணங்களைக் கூட அக்குழு பரீட்சிக்க முடியும். தகவலுக்கான அடைவழி உண்மையிலேயே பொது அதிகாரிகள் தமது பணிகளுக்காக வகை கூற வேண்டும் என்ற நிலையை உருவாக்க மக்களுக்கு அதிகாரம் அளிக்கின்றது. வாக்குரிமையான மக்களின் மிகவும் அடிப்படை ஜனநாயக உரிமையை பிரயோகிக்கும் போது கூட தகவல் அடிக்கடி பெற்றுக் கொள்ள முடியாது போகின்றது. அமைச்சுக்கள் எவ்வாறு செயற்படுகின்றன, அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்படுகின்றனர் மற்றும் புதிய அபேட்சகர்களின் அனுபவம் தகைமை போன்ற உண்மையை வெளியிடும் தகவல்கள் தொடர்ச்சியாக கிடைக்காதவிடத்து வாக்காளர்கள் தமது அடிப்படைத் தேர்வாக ஜாதி, குலம், மதம் அல்லது அவர் சார்ந்த வர்க்கம் அவர்களின் விருபத்திற்குரியவரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் குறுகிய அரசியல் ஆர்வத்தை விருத்தி செய்வதிலேயே முடிகின்றது. இதேபோன்று ஒரு அரசியல் கட்சியின் நிதி விவரங்களை பரிசீலனை செய்யும் உரிமை இல்லாதவிடத்து விசேட அக்கறையுள்ள குழுக்கள் வெறுமனே தமது தனிப்பட்ட நலன் பேண அபேட்சகர்களை நிறுத்தவில்லை என்பதனை ஊர்ஜிதம் செய்ய பிரஜைகளால் முடிவதில்லை. அரசியல் நிதி வழங்கல்களில் சில இலஞ்சத்தையும் தாண்டிச் செல்கின்றது. நன்கு அறியப்பட்ட வேட்பாளர்கள் என்பது நன்கு அறிந்து மேற்கொள்ளப்பட்ட தேர்வு, மிகவும் பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறந்த ஆட்சி முறை என்பனவாகும்.

**உண்மையில் நீங்கள் யாருக்கு வாக்களிக்கின்றீர்கள் என்பதை அறிவது**[37]

பல நாடுகளில் போன்று பாரிய அபராதக் குற்றங்களில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு இந்தியத் தேர்தல் சட்டம் தடை செய்கின்றது. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்காகக் காத்திருப்போர் அல்லது மேன்முறையீடு செய்தவர்களுக்கு இத்தடை செல்லுபடியற்றதாகும். 2002 இல் இந்தியாவின் குஜராத் மாநில தேர்தலின் போது பிரதான அரசியல் கட்சிகளினால் நிறுத்தப்பட்ட ஆறு அபேட்சகர்களுள் ஒருவருக்கு எதிராக பாரிய அபராதக் குற்றச்சாட்டுக்கள் இருந்தன. ஆழும் கட்சியிலிருந்து 25 பேர் வெற்றி பெற்றதோடு ஒரு சிலர் அமைச்சர் பதவிகளையும் வகிக்கின்றனர். கேள்விக்குறிப் பின்னணியுடன் பாராளுமன்றத்திற்கும், மாநில சபைகளுக்கும் போகும் உறுப்பினர் தொகையையிட்டு அதிர்ச்சி அடைந்த கல்வி சார்ந்தோர் குழுவொன்று நியமனத் தாக்கல் தேவைகளில் மாற்றங்களைக் கொண்டுவர இந்தியத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஆணை பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தது. இதன் மூலம் தமக்கு எதிராகவுள்ள பாரிய குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றி அபேட்சகர்கள் தகவல் வெளியிடுவதனைக் கட்டாயப்படுத்துகின்றது.

உயர் நீதிமன்றம் தகவல் உரித்துரிமை ஜனநாயகத்தில் இயற்கையாய் அமைந்துள்ளது என்றும் வாக்காளர்களுக்குத் தமது அபேட்சகர்களின் பின்னணியை விசேடமாக அவர்களின் அபராதம் பற்றிய முந்திய நிலையை அறிவதற்கு அரசியல் யாப்பு உரிமை உண்டு என்றும் இணங்கியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நியமனக் கடிதச் செயற்பாடுகளில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டது. எவ்வாறாயினும் அற்புதமான முறையில் சகல அரசியல் கட்சிகளும் ஒன்று திரண்டு இம்முயற்சியைத் தடுக்கும் முகமாக தேர்தல்கள் ஆணையாளரின் இக்கட்டளையை சக்திவாய்ந்த முறையில் செல்லுபடியற்றதாக்கி அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. இதன் ஆரம்ப முறைப்பாட்டாளர்களும் பிரஜைகள் குழுக்களும் இச்சட்டத்தின் சட்டபூர்வத் தன்மையை எதிர்த்து அரசியல் யாப்பு மூலம் உறுதி செய்யப்பட்ட அவர்களது மனித உரிமையை குறைவடையச் செய்கின்றது. என உயர் நீதிமன்றத்தில் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்தனர். மீண்டும் ஒரு முறை, வாக்காளர் அறிந்து கொள்ள இருக்கும் உரிமையின் புனிதத்துவத்தை மீள் வலியுறுத்தி இச்சட்டத்தை இரத்துச் செய்தது. இவ்வாறாக நியாயமற்ற முறையில் அறிந்து கொள்ளவுள்ள அடிப்படை உரிமையை மட்டுப்படுத்த முடியாது

என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தற்போது சகல அபேட்சகர்களும் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் போது அவர்கள் பாரிய குற்றங்களுக்குப் பொறுப்புடையவர்களா? அவர்களது கல்வித் தன்மை, அவர்களது சொத்துக்கள் கடன் பற்றிய விபரங்களையும் குறிப்பிட வேண்டும். இத்தகவல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவித்தல் பலகை மற்றும் இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக்கப்பட வேண்டும்.

பங்களாதேஷில் இது போன்றதொரு வழக்கு மேல் நீதிமன்ற முன்னிலையில் தொடரப்பட்டது சகல அபேட்சகர்களினதும் சொத்துக்கள், அபராதக் குற்றங்கள், கல்விப் பின்னணி பற்றிய எட்டு விதமான தகவல்கள் வெளியிடப்படுவதனை உறுதி செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு (தே.ஆ) நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது.

### அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை உறுதிப்படுத்துவது

ஜனநாயகம் மற்றும் தேசிய உறுதிப்பாடு, வெளிப்படைத் தன்மைக் கொள்கையினால் அதிகரிக்கச் செய்கின்றதோடு அது மக்களுக்கு அவர்களது பிரதிநிதிகள் மீது பெரும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. இது பிரயோசனமுள்ள ஆட்சித்துறையின் முடிவானதோர் தோற்றமாகும். மக்களின் நம்பிக்கையும், ஆதரவுமின்றி அரசாங்கங்கள் அதன் கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மட்டில் தடங்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதோடு அவற்றின் அமுலாக்கமும் மிகவும் கடினமாயிருக்கும் 47 நாடுகளில் சுமார் 10,000 மக்களின் கருத்தறிந்த 1999 இல் நடாத்தப்பட்ட பொதுநலவாய மன்ற ஆய்வு தமது அரசாங்கங்கள் பற்றி மக்களிடையே தவறான எண்ணம் வளர்ந்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளது. தமது அரசாங்கங்களின் உள்ளெண்ணம் மற்றும் உத்தேசம் பற்றி பிரஜைகள் சந்தேகப்படுகின்றனர். தம்மால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளில் நம்பிக்கை துரோகம் செய்தவர்களாக அல்லது தங்களை உதாசீனப்படுத்தியவர்களாக ஆக்கப்பட்டோம் என்று உணர்கின்றனர். உண்மையாக அவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற நிறுவப்பட்ட முகவர் நிலையங்கள் பற்றி சந்தேகிக்கின்றனர். தாம் புறக்கணிக்கப்பட்டதாகவும், உதாசீனப்படுத்தப்பட்டதாகவும், கவனிக்கப்படாமலும் உள்ளதாக உணர்கின்றனர்.[39] அரசாங்கங்களின் நேர்மைத்திறன் விருத்தி செய்யப்பட வேண்டியதோடு விருத்தியடைவதைக் காணவும் வேண்டும். திறந்த அரசாங்கங்களும், தகவல்களுக்கான அடை வழியும் இவ்விரு முடிவுகளையும் அடைய வழி வகுக்கின்றது.

## இந்திய பொலிஸ் இடமாற்றத்தில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிரான காந்தியவாதி ஒருவரின் விடுதலைப்போராட்டம்[40]

மகாராஷ்டிர மாநிலத்தின் பிரசித்தமான 2002 தகவல் அறிந்துகொள்ளும் உரிமை தொடர்பான சட்டமூலத்தை பாவித்து அரசியல் தலையீடு காரணமாக இடம்பெற்ற பொதுநடவடிக்கையான பொலிஸ் இடமாற்றங்களை வெளிப்படுத்துவதற்காக மும்பாயை தளமாகக் கொண்ட சைலோஷ் காந்தி என்பவர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம், பொலிஸ் குறிப்புப் புத்தகத்தின் கட்டளை 413 ஐ தெளிவாக மீறுவதாகும். பொலிஸார் தனிப்பட்ட உரிமை கொண்டாடும் முகமாக ஏனைய திணைக்கள அதிகாரிகளையோ அல்லது அரசியல்வாதிகளை நாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இரு வருட காலத்தினுள் மாநில சட்டசபை அல்லது மத்திய சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் கட்டளை அல்லது வேண்டுதலின் பேரில் இடம்பெற்ற இடமாற்றங்களின் எண்ணிக்கையை காந்தி கோரினார். காந்தி மேலும் பல வேண்டுகோள்கள் மற்றும் நிலைத்து நிற்கும் 9 விண்ணப்பங்கள் மற்றும் 11 தனிப்பட்ட விசாரணைகளுக்கும் முறைப்பாடுகளை முன்வைத்தார். அவர் அதன் பலன்களைப் பெற முன் மும்பாய் பொலிஸ் அவற்றைத் தாமதப்படுத்த எண்ணிலடங்கா முயற்சிகளை எடுத்தது. மறு விண்ணப்பத்தை தொடர்ந்து லோக் அயுக்தா மாநிலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சுயாதீன மேல்மனு சபை இறுதியில் ஆவணங்களை வழங்குமாறு கட்டளையிட்டதோடு தகவல் வழங்குவதில் ஏற்படுத்திய தாமதத்திற்காக அரசாங்கத்தையும் பொலிஸாரையும் கடுமையாக எச்சரித்தது. அரசியல்வாதிகளினால் இடமாற்றம், சிபாரிசு செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கட்டளையிட்டது.

இறுதியாக மும்பாய் பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தினால் 50 இற்கும் மேற்பட்ட பக்கங்கள் வெளியிடப்பட்டதோடு பாரிய அளவிலான இடமாற்றங்கள் அற்பமான காரணங்களையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் பணிப்பாளர் நாயகம் (DGP) தெரிவித்தார். உதாரணமாக, பல இடமாற்றங்கள் கஷ்டப் பிரதேசங்களில் (புகையிரதப் பொலிஸ் அல்லது கலகம் அடைக்கும் பகுதி) இல் இருந்து 'இலாபம்' தரக்கூடிய நகரங்களுக்கு வேண்டப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. திடுக்கிடச் செய்யும் வகையில் மீளாய்வு செய்யப்பட்ட 61

இடமாற்ற வேண்டுதல்களில் 58 இடமாற்றங்கள் முதலமைச்சர் மற்றும் பிரதி முதலமைச்சர் அலுவலகத்திலிருந்தே வந்திருந்தன. இவற்றுள் பல மாநிலத் தேர்தலுக்கு முன்பு வந்திருந்தன. அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் எம்.பிக்களிடமிருந்து 143 கடிதங்களும் 'சிட்' களும் வந்திருந்தன. இதற்கிடையில் மும்பை பொலிஸ் ஆணையாளர், நகரத்துக்கிடையிலான இடமாற்றத்திற்காக 139 சிபாரிசுக் கடிதங்களைப் பெற்றிருந்தார். பொலிஸ் இடமாற்றத்திற்காக வேண்டுகோள்கள் முன்னாள் மேயர்களை அரசியல் கட்சிகளின் மாவட்டப் பிரிவுப் பிரதானிகளிடமிருந்தும் வந்திருந்தமையை இத்தகவல்களுக்கான காந்தியின் வேண்டுகோளில் இருந்து தெரிய வந்தது.

இதன் பிறகு "கட்டளை 413 ஐ மீறும் எச்செயலும் கடுமையாகக் கையாளப்படும்" எனக் கூறி பிரதிப் பொலிஸ் ஆணையாளர் சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டார். இதற்கு மேலதிகமாக காந்திக்கு பெயர்கள் வழங்கப்படவில்லையாயினும் 71 அதிகாரிகளும் 64 கொன்ஸ்டபிள்களும் அவர்களது இடமாற்றம் சம்பந்தமாக அழுத்தம் கொண்டுவர முயன்றதாக எச்சரிக்கப்பட்டதாகவும் இது பற்றி அவர்களின் சேவைப் புத்தகத்தில் குறிப்பும் எழுதப்பட்டுள்ளதாக காந்திக்கு அறிவித்தார். மேலும் கட்டளை 413 எதிர்காலத்தில் மீறப்படுவது பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது என உறுதியான சமிக்ஞை ஒன்றை பொலிஸ் ஆணையாளர் வெளியிட்டார். தான் கோரிய சகல விபரங்களையும் காந்தி பெற்றிருக்கவில்லையாயினும் அவரது நடவடிக்கை உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் இடம்பெறும் பாரிய ஊழல் மூலம் ஒன்றை அம்பலப்படுத்தியது.

2005 இல் உறுதியான தகவல் அடை வழிச் சட்டமொன்றிற்கு இடமளிக்கும் முகமாக மாநிலச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. மத்திய சட்டத்தின் கீழ் 2008 இல் தகவல் அடை வழி சர்ச்சைகளைத் தீர்க்கும் மத்திய தகவல் ஆணையாளராக காந்தி நியமிக்கப்பட்டார்.

புல வருடங்களாக இருந்த நிலையற்ற தன்மை மற்றும் முரண்பாடு இலங்கையின் அபிவிருத்தியில் பின்னடைவை ஏற்படுத்தியது. தமது அரசாங்கத்தின் மீது மக்களின் நம்பிக்கையைக் கூட்டுவதானது ஒரு வகையில் முரண்பாட்டைக் குறைக்கக் கூடியதாயிருக்கும். வெளிப்படைத் தன்மை மற்றும் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்குமிடையில் இரு தரப்பு சம்பாசணையை ஏற்படுத்தி, தேசிய உறுதிப்பாட்டை ஏற்படுத்தவும் வழிவகுக்கும். இது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்து தாங்கள் அந்நியப்படுத்தப்பட்டோம் என்ற உணர்வை மக்களிடமிருந்து களைவதற்கும் வழிவகை செய்யும். மக்களிடம் தாமும் பங்காளி என்ற உணர்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டைப் பரீட்சிப்பதற்கான இயலுமை போன்றவற்றின் மூலம் மக்கள் தாங்கள் அதிகாரமற்றவர்கள் மற்றும் வாய்ப்புக்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டவர்கள் அல்லது ஒரு குழு மற்றொரு குழுவை விட நியாயமற்ற முறையில் அனுகூலங்களை அடைகின்றது எனும் பலவீனமான மனப்பாங்கைக் குறைக்க முடியும்.

### மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்கு ஆதரவு

நூற்றாண்டின் இறுதியில் பொதுநலவாயத்தைச் சேர்ந்த சகல உறுப்பு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாயினர் அத்தோடு மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை அடைய தமது பொறுப்பு பற்றி வாக்களித்தனர். முழுமையாக வறுமையை ஒழிப்பதற்கும் மற்றும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட இது சர்வதேச சமூகம் உருவாக்கிய ஆய்வுத் தொகுப்பாகும். 2002 இல் கூலம் நகரில் ஒன்று கூடிய பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் வறுமையை ஒழிப்பதற்கு மக்களை மையமாகக் கொண்ட மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி மூலம் எமது வாழ்க்கைத் தரத்தில் உள்ள பரந்த ஏற்றத் தாழ்வை முன்னேற்றகரமான முறையில் நீக்குவதற்கும் வாக்களித்தனர். 2007 இல் கம்பாலா நகரில் கூடிய பொதுநலவாயத் தலைவர்கள் பல உறுப்பு நாடுகள் அபிவிருத்தி இலக்கை அடைவதில் பின்தங்கியுள்ளன எனக் கவலை தெரிவித்தனர். அத்தோடு அபிவிருத்தி அதனோடு ஒத்த இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளை அதிகரிக்கச் செய்ய அவர்களது வாக்குறுதிகளை மீள் உறுதி செய்தனர்.[41]

பரிதாபமாக 2009 இல் வறுமை தொடர்ந்தும் பொதுநலவாய நாடுகளின் அடையாளச் சின்னமாக விளங்கியது. ஏறக்குறைய பொதுநலவாய நாடுகளில் வாழும் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இன்னும் நாளொன்றுக்கு இரண்டு அமெரிக்க டொலர்களுக்குக் குறைவான தொகையிலேயே சீவியம் நடத்துகின்றனர். உலகில் உள்ள 130 மில்லியன் சிறுவர்களுள் அரைவாசியினர் ஆரம்பக் கல்விக்கான வழியின்றி வாழ்வதோடு அவர்கள் பொதுநலவாய நாடுகளிலேயே

காணப்படுகின்றனர்.[42] உலகிலுள்ள நோயாளிகளுள் மூன்றில் இரண்டு பங்கினர் பொதுநலவாய நாடுகளிலேயே உள்ளதோடு அவர்களுள் 60% ஆனோர் பெண்கள் ஆவர்.[43] உப சஹாரா, ஆபிரிக்கா மற்றும் தென் ஆபிரிக்கா (பொதுநலவாயத்தில் 85% இற்கும் மேற்பட்டோர் வதியும்) வில் உலகில் பட்டினியால் வாடுவோரில் பெரும்பாலானோர் வாழ்கின்றனர்.[44] புத்தாயிரம் இலக்கை அடைய இன்னும் ஐந்து வருடங்களே உள்ள வேளையில் பல நாடுகள் குறிப்பிட்ட இலக்கிலும் பின்னடைவான நிலையிலேயே உள்ளன.

இதுவரை வறுமை ஒழிப்பு மற்றும் அபிவிருத்தி உபாய மார்க்கங்களில் பெரும்பாலும் தோல்வியடைவதற்கான காரணம் பல வருடங்களாக நிபுணர்களின் ஆலோசனை பெற்று அவை பூட்டிய அறைக்குள்ளேயே வடிவமைக்கப்பட்டதோடு அதன் மூலம் பலன் பெறக்கூடிய மக்களின் ஆலோசனை பெறப்படவில்லை என்பதாகும். ஏழை மக்கள் விசேடமாக பெண்கள் அடிக்கடி தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிலிருந்து முற்றாக வெளியேற்றப்படுகின்றனர். எதிர்வரும் வருடங்களில் மிகவும் கடன் பழுவுள்ள வறிய நாட்டிற்கு அனுகூலம் பெறக்கூடிய முக்கிய தீர்மானங்கள் அடங்கிய அரசாங்கக் கட்டளைகளை பாதிக்கக் கூடிய உலக வங்கியினால் வேண்டப்பட்ட தமது நாட்டு வறுமை ஒழிப்பு உபாய மார்க்க அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென கானாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முறையிட்டிருந்தார்.[46] உதவி வழங்கும் நாடுகள் அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளை மறைவாக வைத்திருக்கவே அடிக்கடி விரும்புகின்றனர். சிவில் சமூக நிறுவனங்களின் அழுத்தத்தைத் தொடர்ந்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற பல்தரப்பு நிறுவனங்கள் தற்போது வெளிப்படையாக நிற்க ஆரம்பித்துள்ளன. ஆனால் அதற்கென மேலும் பல வேலைகள் செய்ய வேண்டி உள்ளன.

இலங்கை மத்திய தர மனிதவள அபிவிருத்தி நாடாக விளங்கிய போதிலும் இலங்கையில் பலர் வறுமையில் வாடுகின்றனர். 2008ஆம் ஆண்டு ஐக்கியநாடுகளின் மனிதவள அபிவிருத்தி அறிக்கையின்படி இலங்கை ஆய்விற்குட்படுத்தப்பட்ட 177 நாடுகளுள் மொத்த மனிதவள அபிவிருத்திச் சுட்டியின் படி 99வது இடத்தில் உள்ளது.[46] இது 2005இல் இருந்த 93வது இடத்திலிருந்து 6 புள்ளிகள் பின்னடைவாகும்.[47] இது உண்மையிலேயே குறுகிய காலத்தினுள் ஏற்பட்ட கடும் பின்னடைவாகும். இலங்கை தெற்காசியாவில் இந்தியாவிலும் பார்க்க 29 ஸ்தானங்கள் முன்னிலையில் உள்ள அதேநேரம் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டோர் வறுமை மட்டத்திலேயே தொடர்ந்தும் உள்ளனர்.[48] 1,300 அமெரிக்க டொலரான இலங்கையின் தேசிய தலா வருமானம் தெற்காசிய சராசரி வருமானத்தை விடவும் (590 அ.டொலர்) குறைந்த வருமான நாடுகளினது (540 அ.டொலர்) வருமானத்தை விடவும் மிகவும் அதிகமானதாகும்.[49] எனினும் 22.7% ஆன மக்கள் கிராமங்களில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.[50] இன

முரண்பாட்டின் போது ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாக வறுமைப் பிரச்சினை மோசமாகியுள்ளது. இதேபோன்று இல்லற மற்றும் பாலியல் வன்முறை உட்பட உச்ச வன்முறைகளுக்கு எதிராகவும், வேற்றுமை காட்டுவதற்கு எதிராகவும் போராடும் பெண்கள்[51] தொடர்ந்தும் குறைந்தளவிலேயே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். மேலும் அபிவிருத்திக்கான அவர்களது பங்களிப்பு குறைத்து மதிப்பிடப்படுகின்றது. பெண்கள் விசேடமாக தமிழ் பெண்கள், அவர்களது அந்தஸ்தை உயர்நிலைக்குக் கொண்டு வருவதாக ஏற்றுக் கொண்டாலும் தொடர்ந்தும் அவர்களில் பெரும்பாலானோர் ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

**தொகுதியை திறப்பதன் மூலம் விரயத்தை தடுப்பது.**[51]

அரசாங்க நிதியின் ஊழல் மற்றும் விரயம் அரசாங்க சேவையின் பயனுள்ள சரத்துகளுக்கு விசேடமாக நஷ்டத்தை ஏற்படுத்த முடியும். பொதுச் சுகாதாரம் மற்றும் கல்வி முறைமைகள் குறைந்த முதலீடு மற்றும்.·.அல்லது அதன் கீழ் கிடைக்கும் சிறுதொகை நிதியில் கூட இடம்பெறும் மோசடி காரணமாக அவற்றின் பிரதிபலனை எதிர்பார்க்கும் ஏழை மக்கள் அதற்கு எதிராக குரல்கொடுக்க முடியாமல் இருக்கின்றனர்.

இது சமூக அபிவிருத்திக்காக மிகவும் குறைவாக நிதி ஒதுக்குகின்ற அரசாங்கங்கள் உள்ள தெற்கு ஆசிய நாடுகளுக்கு விசேடமாக பிரச்சினைகளைக் கொடுக்கின்றது. குறைந்தபட்சம் இந்நிதியானது சரியான முறையில் செலவிடப்பட வேண்டும். இந்நிதிகளின் வகை கூறலை உறுதி செய்வதற்காக ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள் பற்றிய தகவலுக்கான அடை வழி இருப்பது முக்கியதோர் சாதனமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றின் கல்வி முறையில் ஏற்படும் ஊழலை ஒழிப்பதற்கு தகவல் உரித்துரிமை எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதற்கு உகண்டாவின் சம்பவமொன்று சிறந்த உதாரணத்தை வழங்குகின்றது.

1990களில் உகண்டாவில், கல்விக்கான செலவினம் அதிகரிக்கப்பட்ட போதிலும் ஆட்சேர்ப்பு வீதம் 50% இற்கும் குறைவாகவே தொடர்ந்தும் இருந்ததாயினும் உகண்டாவிலுள்ள கீழ்ப் பிரிவு பாடசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் ஐந்து வருட காலத்தினுள் 87% பணம் அரச அதிகாரிகளின் பைகளுக்குள்ளேயே சென்றன. என இச் செலவினம் தொடர்பாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. கண்டுபிடிக்கப்பட்ட இத்தகவல்களினால் ஆச்சரியமடைந்த தேசிய அரசாங்கம் நிதி

களவாடப்படுவதைத் தடுக்கும் முயற்சியாக மாவட்டங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் நிதி பற்றிய விபரங்களை பத்திரிகைகள் மற்றும் வானொலி மூலம் வெளியிட ஆரம்பித்தது. இதன் அடுத்த முனையில் தாம் பெறும் நிதி விபரங்களை பொது விளம்பரம் மூலம் வெளியிடுமாறு கீழ்ப்பிரிவு பாடசாலைகள் கோரப்பட்டன. பெற்றோர்களுக்கு இத்தகவல்கள் கிடைக்கக் கூடியனவாயிருந்தன. கல்விக்கான அன்பளிப்பின் திட்டங்களை கண்காணிக்க அவர்களால் முடிந்ததோடு உள்ளூராட்சி மட்டத்தில் இச் செலவிற்கு வகை கூறுமாறும் வேண்டினர். ஐந்து வருடங்களில் பணம் திசைமாறிச் செல்வது 80% இலிருந்து 20% ஆகக் குறைந்ததோடு குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுமதிக்கும் மட்டம் இருமடங்கிற்கும் மேலாக 3.6 மில்லியன்களிலிருந்து 6.9 மில்லியன்களாக அதிகரித்தது. பத்திரிகைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புள்ள பாடசாலைகள் அவர்களுக்கான நிதியை ஏனைய பாடசாலைகளை விட 12% இனால் அதிகரிக்கச் செய்ய முடிந்தது. தகவல் பெறும் முறை இலகுவான, குறைந்த செலவிலான, கொள்கை நடவடிக்கையாகும். இருப்பினும் உள்ளூராட்சி மட்டத்தில் பொறுப்பு கூறுவதை அமுலாக்கியதோடு வரி செலுத்துவோரினது பணம் உரிய முறையில் உபயோகிக்கப்படுவதனையும் உறுதி செய்தது.

### சமநிலையான பொருளாதார வளர்ச்சியை எளிதாக்குதல்

தெற்காசிய நாடுகள் அபிவிருத்தியைத் துரிதமாக்குவதற்காக திறந்த பொருளாதாரத்திலேயே அதிகமாகத் தங்கி நிற்கின்றன. ஆனால் அரசாங்கங்களைப் போன்றே பொருளாதாரம் தகவல் வெளியிடப்படாதவரை சரிவர இயங்குவதில்லை.

வெளிப்படைத் தன்மை 'பூரண தகவல்' மற்றும் 'பூரண போட்டி' என்ற திறந்த பொருளாதாரத்தின் கொள்கைகளுக்கு மேலதிகமாக இயல்பான ஓர் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல் உற்சாகப்படுத்துகின்றது. அரசாங்கக் கொள்கைகள் ஒழுங்கமைப்பு அதிகார சபைகள், நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள், விலை மனுக்கள் உத்தரவுப் பத்திரம் மற்றும் கடனுதவி வழங்கல்களில் பிரயோகிக்கப்படும் அளவைகள் பற்றி உரிய நேரத்திற்குச் சரியாக வழமையாகக் கிடைக்கக் கூடிய தகவல்களில் தங்கி நிற்கக் கூடிய நம்பிக்கை வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு இருக்க வேண்டும்.

அதிகாரிகளுக்குட்பட்ட செயற்பாட்டுச் சகதியில் புதைந்திராக பூரண தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான இலகு வழியானது உள்ளூர் பொருளாதாரச் சூழலில் முதலீட்டாளர்களின் நீண்ட கால நம்பிக்கையை ஏற்படுத்தும். உறுதியான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கக் கூடிய வெளிப்படைத் தன்மை மற்றும் வகை கூறலைக் கொண்ட சந்தை சிநேகபூர்வ நல்லாட்சிக் கொள்கைகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட தகவல் உரித்துரிமை அத்திவாரமாக இருக்கின்றது.

குறிப்பாக தனியே பொருளாதாரத்தின் வளர்ச்சியில் மாத்திரம் அல்லாமல் பொருளாதாரச் சமநிலையும் தகவல் அடை வழி மூலம் விருத்தி செய்யப்படுகின்றது. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் ஏழை, பணக்காரர்களுக்கிடையே வளர்ந்து வரும் இடைவெளியைக் குறைப்பதற்கான வழி வகையைச் செய்வது அத்தியவசியமாகும். அதற்கு மேலாக, உலகமயமாக்கலின் நன்மைகள் மிகவும் பரந்தளவில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அத்தோடு அதன் கவனம் வறுமை ஒழிப்பு, மனித இழப்புக்கள் என்பவற்றிற்கு ஊடாகவும் செலுத்தப்பட வேண்டும். அரசாங்கத்திடமிருந்து தகவலை விடுவித்தல் சக்திவாய்ந்தவர்களைப் போலவே அதிகாரம் குறைந்தவர்களுக்கும் பொருளாதாரச் சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்யும். ஒரு தொழிலாளி ஊழியர் ஒழுங்கு விதிகள் மற்றும் அவர்களது உரிமைகள் பற்றிய தகவலைப் பெற் முடியும். ஒரு வியாபாரி உத்தரவுப் பத்திர தேவைப்பாடுகள், வரிவிதிப்புகள் மற்றும் வர்த்தக ஒழுங்கு விதிகள் பற்றிக் கண்டறிய முடியும். விவசாயிகள் காணிப் பதிவுகள், சந்தை விபர ஆய்வு மற்றும் விலை பற்றிய தகவல்களைப் பெற முடியும்.

### ஊழலைச் ஒழித்தல்

இலங்கையில் உக்கிரமடைந்துள்ள ஊழலுக்கு, உத்தரவாதம் அளிக்கப்பட்ட தகவல் உரித்துரிமை முக்கியமான மற்றும் பிரயோகமுள்ள ஓர் மாற்று மருந்தாகும். ஊழல் சட்டத்தின் ஆட்சியை அழித்துவிடுகின்றதோடு இரகசிய இடங்களில் இடம்பெறும் இரகசிய ஒப்பந்தங்களை மறைக்க இரகசியம் பேணும் பரஸ்பரம் ஒத்துழைக்கின்ற பிரபுக்களை உருவாக்குகின்றது. மிகவும் மோசமான சந்தர்ப்பங்களில் அது அரசியலை குற்றவியலாக்கும் மற்றும் குற்றவியலை அரசியல் மயமாக்கவும் வழிகோலும். இது தேர்தலை அர்த்தமற்ற செயலாக மாற்றி முறையற்ற ஆட்சியையும் முறையற்ற ஆட்சியாளர்களையும் சட்டரீதியாக்கும்.

இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும் அட்டையைப் போல் ஊழல் பல சமூகங்களினது பொருளாதார உயிர் நாடியை சீரழிக்கின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி வளர்ச்சியை ஊழல் வருடாந்தம் 0.5 முதல் 1.0 வீதத்தினால் குறைத்துவிட முடியுமென உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. அரசாங்க சேவைகள் அல்லது

உரிமையுள்ளவைகளுக்காக துரித பணம் அல்லது கையூட்டு வழங்க வேண்டி ஏற்படுவதானது மேலதிக சட்டரீதியற்ற வரி செலுத்துவது போலாகும். இலஞ்சம் அல்லது மோசடியுடன் சேர்ந்து மேலதிக செலவினங்களை மேற்கொள்ள குறைந்த வசதியுள்ள ஏழைகள் மீது ஊழல் மிகவும் கட்டுமீறியதாகும். 2008 இல் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் ஊழல் பற்றிய மக்களின் கண்ணோட்டம் என்ற ஆய்வில் இலங்கை மிகவும் ஊழல் மிக்க 180 நாடுகளுள் இந்தியாவிற்கு ஒன்பது இடங்கள் பின் தள்ளி 92 வது இடத்தில் இருந்தது.[52] ஊழலுக்கு எதிராகப் போராடுவதில் இலங்கையின் சட்ட முறை மிகவும் பலவீனமானாதாகக் காணப்பட்டது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் இன் 2007 ஆம் ஆண்டின் நீதித் துறை ஊழல் அறிக்கை இலங்கையின் அச்சுறுத்தப்பட்ட நீதித் துறையின் ஓர் விளைவே ஊழல் எனக் கண்டுபிடித்துள்ளது.[53]

ஊழல் இலங்கையின் மனிதாபிமான உதவி நிபந்தனைகளையும் மிக மோசமான முறையில் குறைத்து மதிப்பிடுகின்றது. 2004 டிசம்பர் 26இல் இலங்கையைத் தாக்கிய கொடூர சுனாமி, ஊழல் மிக்க அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்டோர் வீடின்றித் தவிக்கின்ற வேளையிலும் நிவாரணப் பொருட்கள் வழங்குவதிலிருந்து நன்மை பெற இடமளித்தது.[54] சுனாமியால் அல்லது உள்ளூர் முரண்பாட்டினால் அல்லது இரண்டினாலும் பாதிக்கப்பட்டோர் ஊழல் சந்தர்ப்பங்களை அறியக் கூடியமை அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவுள்ள இயலுமையைப் பொறுத்தேயாகும்.[55] தெளிவாக உள்ள இலங்கையில் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்துள்ளதோடு அரசின் பல வழமையான நடவடிக்கைகளின் பயன்பாட்டையும் பலவீனப்படுத்தியுள்ளது. அரசாங்க சேவை வழங்கல்களில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு தகவல் உரித்துரிமை ஓர் நிரூபிக்கப்பட்ட கருவியாகும். சேவை வழங்கும் நிறுவனங்களினது பழக்கங்கள் பற்றிக் கண்ணோட்டம் செலுத்துவதனால் மிகவும் உள்ளூரிலுள்ள ஊழல் பழக்கங்களைக் கூட அம்பலப்படுத்த சாதாரண மக்களால் முடியும். அத்தோடு அவர்களினது மிக அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதனையும் உறுதி செய்யும்.

### ஊழலைச் சமாளித்தல்

இலங்கையில் ஆழமான பிரச்சினையுள்ள ஊழலுக்கு, உத்தரவாதம் அளிக்கப்பட்ட தகவல் உரித்துரிமை முக்கியமான மற்றும் பிரயோகமுள்ள ஓர் மாற்று மருந்தாகும். ஊழல் சட்டத்தின் ஆட்சியை அழித்துவிடுகின்றதோடு இரகசிய இடங்களில் இடம்பெறும் இரகசிய ஒப்பந்தங்களை மறைக்க இரகசியம் பேணும் பரஸ்பரம் ஒத்துழைக்கின்ற பிரபுக்களை உருவாக்குகின்றது. மிகவும் மோசமான சந்தர்ப்பங்களில் அது ‘அரசியலை குற்றவியலாக்கும்’ மற்றும் ‘குற்றவியலை

அரசியல் மயமாக்கவும்' வழிகோலும். இது தேர்தலை அர்த்தமற்றதாக்கி மேசமான ஆட்சியையும் மோசமான ஆட்சியாளர்களையும் சட்டரீதியாக அங்கீகரிப்பதாக அமையும்.

ஊழல் பல சமூகங்களினது பொருளாதார உயிர் நாடியை அழித்துவிடுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி வளர்ச்சியை ஊழல் வருடாந்தம் 0.5 முதல் 1.0 வீதத்தினால் குறைத்துவிட முடியுமென உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. அரசாங்க சேவைகள் அல்லது உரிமையுள்ளவைகளுக்காக 'துரித பணம்' 'பசை' அல்லது 'கையூட்டு' வழங்க வேண்டி ஏற்படுவதானது மேலதிக சட்டரீதியற்ற வரி செலுத்துவது போலாகும். இலஞ்சம் அல்லது மோசடியுடன் சேர்ந்து மேலதிக செலவினங்களையும் ஏழைகளும் வசதி குறைந்தவர்களுமே ஏற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

2008 இல் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் ஊழல் பற்றிய மக்களின் கண்ணோட்டம் என்ற ஆய்வில் இலங்கை மிகவும் ஊழல் மிக்க 180 நாடுகளுள் இந்தியாவிற்கு ஒன்பது இடங்கள் பின் தள்ளி 92 வது இடத்தில் இருந்தது.[53] ஊழலுக்கு எதிராகப் போராடுவதில் இலங்கையின் சட்ட முறை மிகவும் பலவீனமானாதாகக் காணப்பட்டது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் இன் 2007 ஆம் ஆண்டின் நீதித் துறை ஊழல் அறிக்கை இலங்கையின் "அச்சுறுத்தப்பட்ட நீதித் துறையின் ஓர் விளைவே ஊழல்" எனக் கண்டுபிடித்துள்ளது.[54] ஊழல் இலங்கையின் மனிதாபிமான உதவி நிபந்தனைகளையும் மிக மோசமான முறையில் குறைத்து மதிப்பிடுகின்றது. 2004 இல் இலங்கையைத் தாக்கிய கொடூர சுனாமியால் பாதிக்கப்பட்டோர் வீடின்றித் தவிக்கின்ற வேளையிலும் நிவாரணப் பொருட்கள் வழங்குவதிலிருந்து அரசஅதிகாரிகள் மோசடிசெய்ய இடமளித்தது.55 சுனாமியால் அல்லது உள்ளூர் மோதல்களினால் அல்லது இரண்டினாலும் பாதிக்கப்பட்டோர் ஊழல் சந்தர்ப்பங்களை அறியக் கூடியமை அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவுள்ள இயலுமையைப் பொறுத்தேயாகும்.[56] உண்மையிலேயே இலங்கையின் வாழ்க்கைத் தரத்தை இது பாதித்துள்ளதோடு அரசின் பல வழமையான நடவடிக்கைகளின் பயன்பாட்டையும் பலவீனப்படுத்தியுள்ளது. அரசாங்க சேவை வழங்கல்களில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு தகவல் உரித்துரிமை ஓர் நிரூபிக்கப்பட்ட கருவியாகும். சேவை வழங்கும் நிறுவனங்களினது பழக்கங்கள் பற்றிக் கண்ணோட்டம் செலுத்துவதனால் மிகவும் உள்ளூரிலுள்ள ஊழல் சம்பவங்களைக் கூட அம்பலப்படுத்த சாதாரண மக்களால் முடியும். அத்தோடு அவர்களினது மிக அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதனையும் உறுதி செய்யும்.

மிகவும் ஊழல் மிக்க அரசாங்கங்கள் உள்ள நாடுகள் கூட குறைந்த மட்ட அபிவிருத்தியைக் கொண்டுள்ளன அல்லது தகவல் அடைவழி உள்ள நாடுகளும் குறைந்த ஊழலுடையனவாகும் எனும் கண்ணோட்டம் தற்செயலான நிகழ்வு அல்ல. தகவல் உரித்துரிமைச் சட்டம் ஊழல் மீது அரசாங்கங்களை மறைவாக நடைபெறும் நேர்மையற்ற வியாபாரம் மற்றும் இரகசிய வியாபாரங்களை பிரகாசிக்கச் செய்கின்ற ஒளி மூலமாகச் செயற்படுகின்றது. இது சிவில் சமூகத்திற்கு விசேடமாக ஊடகங்களுக்கு அரச அதிகாரிகளின் சிகப்பு நாடா தடைகளை மற்றும் சாதுரியங்களையும் களைந்துவிட்டு மறைந்து கிடக்கும் உண்மைகளை அறிய உதவும்.

## தகவல் உரித்துரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை - ஓர் தெளிவான பரஸ்பர சம்பந்தம்[57]

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் அமைப்பின் வருடாந்த ஊழல் கண்ணோட்டச் சுட்டி, வியாபாரிகள் மற்றும் அபாய ஆய்வாளர்கள் கண்ணோட்டத்தின்படி ஒரு நாட்டிலுள்ள ஊழலின் மட்டம் பற்றி ஆய்வு செய்கின்றது. 2008 இல் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனலினது வருடாந்த ஊழல் கண்ணோட்டச் சுட்டியில் சிறந்த நாடு என புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட பத்து நாடுகளுள் ஒன்பதுக்கும் குறையாத நாடுகளில் பொதுமக்கள் அரசாங்க கோவைகளைப் பார்க்கக்கூடிய வகையிலான பயனுள்ள சட்டங்கள் இருந்தன. ஊழலைப் பொறுத்த மட்டில் மிகவும் மோசமான நாடுகள் என கண்ணோட்டமிடப்பட்ட பத்து நாடுகளுள் எவற்றிலுமே தகவல் பெறும் அடை வழிச் செயற்பாடுகள் இருக்கவில்லை.[58]

| நிலை | நாடு | த.உ.சட்டம் | நிலை | நாடு | த.உ.சட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | டென்மார்க் | 1970 ஆம் ஆண்டின் அரச கோவைகளை பார்வையிடும் சட்டம் | 171 | கொங்கோ ஜனநாயகக் குடியரசு | இல்லை |
| 1 | நியுஸிலாந்து | 1982 ஆம் ஆண்டின் அலுவலகத் தகவற் சட்டம் | 171 | இகுவாடொரியல் கைனி | இல்லை |
| 1 | சுவீடன் | 1766 ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரச் சட்டம் | 173 | சாட் | இல்லை |
| 4 | சிங்கப்பூர் | இல்லை | 173 | கைனி | இல்லை |
| 5 | பின்லாந்து | 1951 ஆம் ஆண்டின் வெளிப்படை அரச நடவடிக்கைச் சட்டம் | 173 | சூடான் | இல்லை |
| 5 | சுவிற்சலாந்து | 2004 ஆம் ஆண்டின் தகவல் சுதந்திரச் சட்டம் | 176 | ஆப்கானிஸ்தான் | இல்லை |
| 7 | ஐஸ்லாந்து | 1986 ஆம் ஆண்டின் தகவல் சட்டம் | 177 | ஹெய்ட்டி | இல்லை |
| 7 | நெதர்லாந்து | 1978 ஆம் ஆண்டின் வெற் ஒபன்பாரெஹ்ற் வென் பெஸ்சூர் சட்டம் | 178 | ஈராக் | இல்லை |
| 9 | அவுஸ்திரேலியா | 1982 ஆம் ஆண்டின் தகவல் சுதந்திரச் சட்டம் | 178 | மியன்மார் | இல்லை |
| 9 | கனடா | 1982 ஆம் ஆண்டின் தகவல் கையாளும் சட்டம் | 180 | சோமாலியா | இல்லை |

2006 இல் இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கி பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (oecd), ஆசிய பசுபிக் ஊழல் எதிர்ப்பு முயற்சியில் சேர்ந்து கொள்ள முயற்சி எடுத்து வேலையில்[59] எதிர்பாராத விதமாக ஊழலைத் தடுப்பதற்காக பயனுள்ள வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த அல்லது ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க பரந்த முயற்சிகள் எதனையும் மேற்கொள்ள அரசாங்கம் தவறியுள்ளது. தகவல் உரித்துரிமைச் சட்டம் இலங்கையில் இல்லாமல் இருப்பதானது அரசாங்கம் பழைய தவறுகளை மீண்டும் மேற்கொள்ள மற்றும் நாட்டினைச் சிறிதளவு பொறுப்பு கூறலுடன் தொடர்ந்தும் மூடிய கதவுகளுடன் நடாத்திச் செல்கின்றது என்பதேயாகும்.

**இந்திய உணவுப் பங்கீட்டு முறையில் இடம்பெற்ற ஊழலை அம்பலப்படுத்தல்**

டெல்லியை மையமாகக் கொண்ட பரிவர்த்தன் எனும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஏழைகளுக்கான உணவுப் பங்கீட்டை உரிய முறையில் பகிர்வதைத் தடுக்கும் மோசமான ஊழலை எதிர்ப்பதற்கென இரண்டு வருட பிரசாரமொன்றை மேற்கொண்டது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 6.5 கோடி மக்களுக்கு உணவு மானியம் வழங்க இந்திய அரசாங்கம் வருடாந்தம் ரூபா 26,000 கோடியைச் செலவிடுகின்றது. இத்திட்டத்தின் மூலம் மானிய அடிப்படையில் உணவு வழங்கப்படுவதோடு பொது பங்கீட்டு முறையின் (PPDS) கீழ் இதனைப் பெற பிரத்தியேகமாக நடாத்தப்படும் பங்கீட்டுக் கடைகளுக்கு ஏழை மக்கள் அவர்களது பங்கீட்டு அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

2003 மார்ச் இல், டெல்லி தகவல் உரித்துரிமைச் சட்டம் 2000 ஐ உபயோகித்து சுந்தர் நகர் மாவட்டத்திலுள்ள சகல பங்கீட்டு கடைகளினதும் நான்கு மாத கால பதிவுகளைக் கோரி பரிவர்த்தன் விண்ணப்பம் செய்தார். இப்பதிவுகளைக் கோரிய பரிவர்த்தனின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டபோது இந்தச் சட்டத்தின் கீழ் அமைந்துள்ள மேன்முறையீட்டு அதிகாரியிடம் 2003 ஜுன் மாதம் இது தொடர்பாக எடுத்துச் சொல்லப்பட்டபோது இப்பதிவுகளை வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. எவ்வாறாயினும் 2003 செப்டம்பர் இறுதியிலேயே இப் பங்கீட்டு கடைகளின் பதிவுகளைப் பரீட்சிக்க பரிவர்தனின் தொண்டர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டது. ஆச்சரியம் மிக்க இச்சிறிய வெற்றியில் அவர்கள் பங்கீட்டுகடை உரிமையாளர்களினால் உதாசீனம்

செய்யப்பட்டு வெளிப்படையாகவே அச்சுறுத்தப்பட்டனர். தகவல் பெறக் காரணமாக பங்கீட்டுப் பதிவுகளுக்கான ஒரு சில வேண்டுதல்கள் வாபஸ் பெறப்பட்டன.

இறுதியாக 2003 ஒக்டோபர் இறுதியில் விண்ணப்பதாரிகளுக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. இப்பதிவுகளை கணக்காய்வு செய்த பின், அவர்கள் நேர்காணல் செய்த 182 குடும்பங்களுள் 142 குடும்பங்கள் 2003 ஜுன் மாதத்துக்காக எதுவித கோதுமைத் தானியத்தையும் பெற்றிருக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. 167 குடும்பங்கள் அரிசி எதனையும் பெற்றிருக்கவில்லை. மக்களிடையே பகிர்ந்தளிக்க வேண்டிய 4650 கிலோ கோதுமையில் 595 கிலோக்களே உண்மையாக வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 87 வீதமும் கறுப்புச் சந்தைக்கே சென்றன. அன்றாட விற்பனைப் பதிவின்படி பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டிய 1820 கிலோ அரிசியில் 110 கிலோக்களே மக்களுக்குக் கிடைத்துள்ளன. இதன்படி 94 வீதமும் சூறையாடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான அழுத்தத்தின் பின் டெல்லி அரசாங்கம் விநியோக முறையை முழுமையாக மீளாய்வு செய்வதற்குக் கட்டளையிட்டது. 2005 பெப்ரவரி முதல் சுந்தர் நகரில் பங்கீடு உரிய நேரத்திற்கு வழங்கப்படும் உரிய விலையில் விற்கப்படும் திடீர் மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. டெல்லி முழுவதுமான ஆட்சிப் பரப்பில் பங்கீட்டுப் பதிவுகள் குறைந்த பட்சம் மாதம் ஒரு முறையாவது பொது மக்களின் பரிசீலனைக்காக வழக்கமாக வைக்கப்படும் என முதலமைச்சர் பரிவரத்தனுக்கு உறுதி அளித்தார். பரிவர்த்தன் மற்றும் ஆதரவாளர்கள் எடுத்த கடும் முயற்சி காரணமாய் ஊழல் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தது.

### ஊடக செயற்பாடுகளை ஊக்குவித்தல்

பலமான ஜனநாயக அமைப்பினுள் ஊடகம் காவல் நாயாக செயற்படுகின்றது. அது சக்தி வாய்ந்தவற்றை ஆழ்ந்து பரிசோதிப்பதோடு தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழலை அம்பலப்படுத்துகின்றது. கல்வி அறிவற்ற நிலை பரந்து கிடக்குமிடத்து அது தகவல் பரப்புவதற்கான பலம் வாய்ந்த ஊடகமாகும். வானொலி மற்றும் தொலைக்காட்சி முக்கிய பரிவர்த்தனை இணைப்பாக விளங்குகின்றது. இலங்கையில் 13 தேசிய பத்திரிகைகளும் 15 உள்ளூர்ப் பத்திரிகைகளும் மேலும் 10 இற்கும் மேற்பட்ட தொலைக்காட்சி சேவைகளும் உள்ளன. எதிர்பாராத விதமாக மக்களைச்

சென்றடையக் கூடிய ஊடகங்களின் வலிமை வெளிப்படைத் தன்மையற்ற அரசாங்கங்களினால் ஓர் அச்சுறுத்தலாகவே கணிக்கப்படுகின்றது. அவ்வாறான அரசாங்கங்கள் ஊடகங்களின் தனியார் உரிமைகளை ஒழுங்கமைப்புப் படுத்தியுள்ளதோடு செய்தி திரட்டல், புலனாய்வு செய்தல் மற்றும் தகவல் அறிவிக்கும் ஊடகங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. மரண அச்சுறுத்தல் கிடைக்கப் பெற்ற பின் 'குறைந்த பட்சம் 20 இலங்கை ஊடகவியலாளர்கள்' நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. அத்தோடு 2006 ஆம் ஆண்டு எல்.டி.டி.ஈ கிளர்ச்சியாளர்களை நசுக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது முதல் 14 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.[61]

ஒரு காலத்தில் சிறப்பாக செயற்பட்ட ஊடகத்துறை இப்போது இலங்கை ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக பிரபல்யம் பெற்றுள்ளது. உலகெங்குமுள்ள ஊடகவியலாளர்கள் "ஊடகவியலாளர்கள் மீதான யுத்தத்தை நிறுத்தவும்" என இலங்கை அரசைக் கோரியுள்ளனர்.[62] எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு 2009 முதல் அரை ஆண்டில் ஏற்கனவே இரு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் மூவர் சிறையிடப்பட்டுள்ளதையும் தெரிவித்துள்ளது. ஊடக சுதந்திரம் பற்றிய உலகளாவிய ஆய்வில் இலங்கை 173 நாடுகள் கொண்ட பட்டியலில் 165 வது நிலையிலேயே உள்ளது.[63]

சட்ட ஒழுங்குபடுத்தல்கள் மூலம் ஊடகம் கறை படிந்து அல்லது அரசாங்கங்கள் அல்லது ஏனைய பலம்வாய்ந்த ஆர்வமுள்ளவர்களிடமுள்ள நம்பத்தகு தகவல்களைப் பெறமுடியாவிடின் அவை, அவற்றின் சிறந்த பங்களிப்பைச் செய்ய முடியாது. ஊடகவியலாளர்கள் தாம் விசாரணை நடாத்தத் தேடும் அதே மக்களினால் வழங்கப்படும் நம்பிக்கையான ஊடக அறிக்கைகள் மற்றும் சுயமாக முன்வந்து விபரங்களை வழங்குதல் போன்றவற்றில் அல்லது தகவல் கசிவுகள் அல்லது தனது அதிர்ஷ்டத்திலேயே தங்கி நிற்கவேண்டியுள்ளனர். தகவல் பெறும் வழி இல்லாதவிடத்து ஊடகவியலாளர்களின் செய்திகள் உண்மைக்குப் புறம்பானது மேலும் உண்மைக்குப் பதிலாக அரைகுறையானதும் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டதும் என்ற அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும். ஒரு பலம் வாய்ந்த தகவல் பெறக்கூடிய வழியுடைய ஆட்சியில் ஊடகங்கள் முக்கிய தகவல்களை சரியான முறையில் தேடவும், பெற்றுக் கொள்ளவும் அரசாங்கத்தினதும்,

மக்களினதும் ஆர்வத்திற்கு ஏற்ப தெரிவிக்க முடியும்.

**இந்தியாவில் பில்லியன் ரூபாய்கள் பெறுமதி வாய்ந்த தொழில் உத்தரவாதத் திட்டத்தின் குறைகளை அம்பலப்படுத்தல்**[64]

ஏழைகளினதும் வறிய, மக்களின் நன்மை கருதிய திட்டங்களைப் பேராசை கொண்ட அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தேவையானவர்களிடமிருந்து அறிவு ரீதியாக கொள்ளையடிப்பதற்கு உணவை அடிக்கடி தமக்குச் சாதகமாய் பயன்படுத்துகின்றனர். மகராஷ்டிராவில் அரச தொழில் உத்தரவாதத்தின் கீழ் ஏழைத் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு பொது வேலைகள் திணைக்களத்தினது ஊழல்களை கண்டுபிடிக்கவென இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை புதிய தகவல் உரித்துரிமைச் சட்டத்தை அண்மையில் உபயோகித்தபோது இது உறுதிப்படுத்தப்பட்டது. மாநில ஏழைக் குடும்பங்களிலுள்ள ஓர் அங்கத்தினருக்கு குறைந்த பட்சம் 100 நாட்களுக்கான தொழில் வாய்ப்பை உறுதி செய்கின்றது.

உள்ளூர் பாதை நிர்மாண வேலைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கும் பெயர்ப் பட்டியலை இந்தியன் எக்ஸ்பிரஸ் பெற்றுக்கொண்டது. அப்பதிவுகள் 'பன்டோம்' ஊழியர்களுக்கு ஊதியம் கொடுத்ததாகக் காட்டப்பட்டுள்ள போதிலும் அவர்களில் பலர் ஊதியம் வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கும் பல நாட்கள் முன்பே இறந்தவர்களாவர். இத்திட்டத்தின் உள்ளூர் நிர்வாக முறையில் காணப்படும் வகைகூறல் குறைபாட்டினை இம் மோசடி அம்பலப்படுத்தியது. இந்தியன் எக்ஸ்பிரஸ் மூலம் அம்பலப்படுத்தப்பட்ட இது அரசாங்க வட்டாரத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியதோடு இவ் வஞ்சகம் பற்றி பூரண விசாரணை நடாத்த உத்தரவிட இதற்குப் பொறுப்பான அமைச்சர் கட்டாயப்படுத்தப்பட்டார்.

## ஆனால் இடையூறுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஜனநாயகத்திற்கும் மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்கும் வெளிப்படையாய் உள்ள அரசாங்கத்தினது தெளிவான நன்மை இருந்தபோதிலும் பரிசிலனைக்குத் தம்மைத் தயார்படுத்தப் பழக்கப்படாத அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மக்களுக்கு தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை வழங்காமலிருக்க பல நியாயங்களை முன்வைக்கின்றனர். இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாக நிறுவனங்களும் இதிலிருந்து வேறுபட்டதல்ல. ஆனால் அவர்களுடைய எந்தவொரு வாதங்களும் நியாயமானதாகத் தெரியவில்லை.

அபிவிருத்திக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்குத் இடையூறாக இருப்பதாக அதிகாரிகள் வாதிடுகின்றனர். ஏனெனில் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தல் நீதியான மற்றும் சுதந்திரமான கருத்தாடல்களைக் கட்டுப்படுத்தும், நேர்மையான அறிவுரையைத் தடுக்கும். ஆகவே அரசாங்கத்தின் மென்மையான செயற்பாட்டை ஆழமாகத் தடைசெய்யும் என்கின்றனர். அதிகாரிகள் தீர்மானம் எடுக்கும் பரப்பு, எவ்வாறு பிரமாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, மதிப்பீடு செய்யப்படுகின்றன, ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றது. வரவு-செலவு திட்டம் தயார் செய்யப்படுகின்றது அல்லது பயன்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன, யாருடைய அறிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும் ஆகியன மரபு ரீதியாகவே சார்புள்ளதாக அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் உள்ளதாக அமைய வாய்ப்பு உண்டு. இலங்கை அரசாங்கத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் தகவல் வெளியிடுவதனைத் தடை செய்துள்ள அதேவேளை அரச துறையில் இரகசியம் பேணும் கலாச்சாரம் பதிவுகளை சரியான முறையில் மேற்கொள்ளாத நிர்வாக செயற்பாட்டை உருவாக்கியுள்ளது.

வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்பு இல்லாமல் இப்போக்கினைச் சரிபார்க்கக் கூடிய வாய்ப்பு இல்லை. இதற்கு எதிரிடையாக வெளியிடப்படக் கூடும் என்ற அச்சம் அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்தின் தரத்தை விருத்தி செய்யும். அவுஸ்திரேலியச் சட்டம் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 1995 இன் அறிக்கையொன்று தகவல் சுதந்திரச் சட்டம் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளவும் கொள்கைத் தீர்மானங்களைப் பதிவு செய்வதற்கும் கொள்கைத் திட்டமிடுபவர்களின் மனநிலையை ஒன்று திரட்டுகின்றது எனக் கண்டுபிடித்துள்ளது. நாம் எடுக்கும் தீர்மானங்களும் செயற்பாடுகளும் பொது மக்களுக்கு ஏற்றது என தீர்மானிக்கப்பட்டு பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்ற அறிவுநிலை பொதுத்துறையில் தொடர்ச்சியான ஒழுக்கத்தை அமுல்படுத்துகின்றது.[65] பொதுக் கடமைகளை

பகிரங்கமாகச் செய்யும் போது நேர்மையான அரச அதிகாரிகள் தொந்தரவுகளிலிருந்து காப்பாற்றப்படுவதோடு வெளியிலிருந்து வரும் செல்வாக்கிற்கு ஆளாவது குறையும் என்பதையும் உறுதி செய்கின்றது.

அரசாங்கம் வெளிப்படைத் தன்மையாக இருக்கும் போது அரசாங்க அதிகாரிகள் அல்லது ஏனைய நாடுகளுடனான உணர்வு மிக்க உயர் மட்ட செய்திப் பரிவர்த்தனைகள் பற்றி வெளிப்படுத்தப்படலாம் என அரசாங்கங்கள் ஜாக்கிரதையாக இருக்கக் கூடும். உலக நாடுகளின் முன் தம்மை பலவீனப்படுத்தக்கூடிய தகவல்களை விசேடமாக தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட செய்திகள், வெளிநாட்டு உறவுகள் அல்லது நிதி நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகள் பற்றி வெளிப்படுத்துவது பொது நன்மையின் பேரில் ஆகாது என பல அதிகாரிகள் வாதிடுவார்கள். இவ் ஆர்வங்களைப் பாதுகாப்பதில் பெறுமதி இருந்தாலும் அவைகளைப் பேணும் வகையில் தகவல்களை பெறும் சட்டங்களை இலகுவாக இயற்றலாம். ஆளும் கட்சியின் தேர்தல் வெற்றியை பாதிக்கக்கூடிய விமர்சனம் அல்லது அசௌகரியமான வெளிப்படுத்தலிருந்து அதிகாரிகளைப் பாதுகாத்தல் அல்லது அரசாங்கத்தின் தனிப்பட்ட தலைவர்கள் அல்லது அரச அதிகாரிகளுக்கு சங்கடத்தை உண்டு பண்ணுக் கூடியவர்களைப் பாதுகாப்பதனைச் சட்டம் மேற்கொள்ளாது. இது வெளிப்படைத் தன்மைக்கான அரசாங்கத்தின் தடைகள் என்ற உண்மையான அச்சமாகும்.

இரகசிய உரிமையை மீறுதல் அல்லது முக்கிய வர்த்தக ஆர்வங்களை பாதிக்கக் கூடுமென சில சமயங்களில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இச்செய்திப் பரிவர்த்தனைகளில் விசேட மாயைகள் எதுவுமில்லை. உண்மையிலேயே, அரசியல் அல்லது வர்த்தக ரீதியில் 'உணர்வு மிக்கது' என சிபாரிசு செய்யப்படுவது மாத்திரம் பொது மக்களின் பார்வையிலிருந்து ஒரு தகவலை மறைத்து வைப்பதற்குப் போதியதாக இல்லை என பெறும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரத்தியேகத்தில் உள்ள இரகசியத்தை விட பொது நலனில் உள்ள வெளிப்படைத்தன்மை மிக நல்லதெனத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**பயங்கரவாதம் மீதான யுத்தம்: தகவல்களுக்கு எதிரான யுத்தமா?**

பயங்கரவாதம் மீதான யுத்தம்' ஆரம்பமானதுடன் தகவல்களைத் தெரிந்து கொள்ளும் சட்டங்களை மீண்டும் வரைய வேண்டிய உத்வேக சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் ஒரே வகையில் அரச முகவர் நிலையங்களுக்கு விரிவான

அதிகாரங்களை வழங்கக் கூடிய மிகக் கொடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை துரிதமாக இயற்றும் வகையில் அல்லது இருக்கக் கூடிய சட்டங்களை வலிமைப்படுத்துவதில் துரிதமாகச் செயற்பட்டன. இதில் முக்கிய அம்சம் யாதெனில் பொதுத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தமையாகும்.

பங்களாதேஷில், அதிகரித்து வரும் போராளிகள் மற்றும் குற்றச் செயல்களை அடக்குவதற்காக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக 2005 டிசம்பரில் அரசாங்கம் தெரிவித்தது.[66] எவ்வாறாயினும், இது ஊடகம் மற்றும் பத்திரிகையாளர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஏற்கனவே அரசியல் தாக்கத்திற்கு இலக்காகியுள்ள பொது தகவலைப் பெற மட்டுப்படுத்தப்பட்ட வழிமுறையைக் கொண்டுள்ள ஊடகத்தின் செயற்பாடுகளை மேலும் குறைக்க இச்சட்டம் பயன்படுத்தப்படுமென அச்சம் கொண்டுள்ளனர். கனடாவில், பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட சகல தகவல்களையும் மறைப்பதற்குப் புதிய சட்டம் நீதி அமைச்சருக்கு அதிகாரமளிப்பதோடு தகவல் ஆணையாளரினால் நடாத்தப்படும் விசாரணைகளை ரத்துச் செய்யக் கூடிய அதிகாரமும் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் அவசியம் உண்மையிலேயே எந்தவொரு அரசாங்கத்திற்கும் மற்றும் அல்லது பிரஜைகளுக்கும் முக்கியமானதாகும். ஆனால், சகலவிதமான தகவல் வெளியீடுகளையும் அடக்குவதற்கு பாதுகாப்புச் சட்ட உடன்பாடு வழங்கத் தூண்டுவது ஆழ்ந்த கவலையைத் தரக்கூடியதாகும். தேசங்கள் திறந்த அரசாங்கத்திற்கான அவர்களது உடன்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக நிற்பதோடு “பாதுகாப்புக் காரணத்தை” காட்டி அபாயத்தின் முதல் அறிகுறியாக பெரும் இன்னல்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட உரிமைகளை நீக்குவதற்கு இடமளிக்கக்கூடாது. பயங்கரவாதிகளின் குறிக்கோளை உணர்ந்துகொள்வதற்காக பயங்கரவாதத்தின் அற்ப அச்சுறுத்தல்களுக்கு வழிவிடுவது இப்பயங்கரவாதம் தொடர்ந்தும் இருப்பதற்கு இடமளிப்பதாகவே அமையும்.

